எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 10 அதிர்வு 110 ஆவணி 2026 editor@ethiroli.com தொ.பே:1800 960 162

Budget Friendly
Home Improvements Pty Ltd
Quality
Renovation Work
0400 287 198

ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

ROYAL
INTERNATIONAL
MONEY TRANSFERS
EASY • FAST • SAFETY
நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டிநொங்' இல்
புதியதோர் சேவை
BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank
Same day bank transfer
No One Beat Our Rate
THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175
(03) 87649143
0406409403
royalinfomoney@gmail.com

GRACE GROCERY
FRESH FINDS GREAT DEALS
INDIAN AND SRILANKAN

GRACE GROCERY

INDIAN AND SRILANKAN GROCERY

Our Current Location

Casey Central (Narre Warren) and Clyde North next to ALDI/Bunnings

Our New Locations Opening Soon

- Mambourin Shopping Centre (Mambourin) - 2025 / • Farm Gate Local (Clyde) - 2025
- Ramlegh Shopping Centre (Clyde) - 2025 / • Orana Shopping Centre (Clyde) - 2026

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
ஆவணி 2026

மாகாணசபைத் தேர்தலும் முதலமைச்சர் கனவுகளும்

● கருணாகரன்

இலங்கையில் மாகாணசபைகளுக்கான தேர்தல் நடக்குமா? இல்லையா என்று யாருக்குமே இன்னும் சரியாகத் தெரியாது. ஜனாதிபதிக்கும் தெரியாது. தேர்தல் திணைக்களத்துக்கும் தெரியாது. மக்களுக்கும் தெரியாது. புத்த பிக்குகளுக்கும் தெரியாது. ஏன் கடவுளுக்கும் தெரியாது.

ஆட்சிக்கு வர முன்பு தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிவிப்பில் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படும் என்றே சொல்லப்பட்டது. ஆட்சிக்கு வந்த பிறகும் தேசிய மக்கள் சக்தி ஆட்சியாளர்கள் மாகாணசபைகளுக்கான தேர்தலைப் பற்றிப் பேசி வருகிறார்கள். ஆனால், ஆளாளுக்கு ஒவ்வொரு மாதிரிப் பேசி வருகிறார்கள். இதுதான் குழப்பத்துக்குரியது.. இதைத் திட்டமிட்டே செய்கிறார்களா அல்லது அரசாங்கத்தரப்பிலிருந்து அவரவருக்குத் தெரிந்த மாதிரிப் பேசுகிறார்களா? என்று தெரியவில்லை. ஆனாலும் NPP அரசாங்கத்துக்கு இதொரு அழுத்தமாகவே உள்ளது.

மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டும் என்று ஆட்சியில் இல்லாத அனைத்துக் கட்சிகளும் அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டேயிருக்கின்றன. ஒருகாலத்தில் மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்தாமல் - நடத்த விரும்பாமல் தவிர்த்து வந்த கட்சிகள் கூட இப்போது மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்துமாறு கோருகின்றன. காலத்தின் விசித்திரம் அப்படி. தமிழ்த்தரப்பில் மாகாண சபைகளைப் பற்றி அதிகம் அக்கறைப்படாத ஒரு கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் (தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி) மட்டுமே. ஆனால், அவர்களும் மாகாணசபைகளுக்கான தேர்தல் என்று வந்தால் போட்டியிடுவார்கள்.

மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்துமாறு தேர்தல் சுயாதீனத்தைக் கோரும் 'கபே' அமைப்பும் கேட்டுள்ளது. "இது மக்களுடைய ஜனநாயக அடிப்படைகளில் ஒன்று. அதை அரசாங்கம் மறுதலிக்க முடியாது" என 'கபே' கூறுகிறது. "மக்களுடைய ஜனநாயக உரிமைகளும் விருப்பங்களும் மதிக்கப்பட வேண்டும். ஆகவே மாகாணசபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும். இதற்கான முயற்சிகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்" என இந்தியா தொடக்கம் மேற்குலக நாடுகள் வரையில் பல தரப்புகளும் வலியுறுத்துகின்றன.

கடந்த வாரம் கூட இலங்கைக்கு வந்திருந்த இந்திய வெளியுறவுச் செயலர் விக்ரம் மிஸ்ரி மாகாணசபைகளுக்கான தேர்தலைக் காலம் தாழ்த்தாமல் இலங்கை அரசாங்கம் நடத்த வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார்.

இந்தப் பின்னணியில் சிலவேளை இந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் மாகாணசபைகளுக்கான தேர்தல் நடத்தப்படலாம். உறுதியாகச் சொல்வதற்கில்லை. ஆனால், யாழ்ப்பாணத்திலோ, ஆட்டைக் கொண்டுவருவதற்கு முன்பே இறைச்சியை ருசி பார்க்கிறமாதிரிச் சில காரியங்கள் நடக்கின்றன. மாகாணசபைகளுக்கான தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்பே நான்கைந்து முதலமைச்சர் வேட்பாளர்கள் களமிறங்கத் தயாராகி விட்டனர். அல்லது களமிறக்கப்படுவதற்குத் தயார்ப்படுத்தப்படுகின்றனர். இதைப்பற்றிய அறிவிப்புகள் சமூக வலைத்தளங்களைக் கடந்து அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களிலும் பகிரங்கமாக வரத் தொடங்கி விட்டன.

இவ்வாறு பிரகடனப்படுத்தப்படும் வேட்பாளர்கள் யாரென்றால், நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ள இராமநாதன் அருச்சுனா, சிவஞானம் சிறிதரன், தமிழரசுக் கட்சியின் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் மற்றும் முன்னாள் நீதிபதி இளஞ்செழியன், றீச்சா (ReeChaa) பாஸ்கரன் என இந்தப் பட்டியல் உள்ளது. இதில் சிறிதரனும் சுமந்திரனும் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இருவரும் ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதால், அந்தக் கட்சியே தமது தரப்பிலிருந்து யாரை வேட்பாளராக நிறுத்துவது என்று முடிவெடுக்கும் என்று நாம் புரிந்து கொள்ளலாம். ஆனாலும் தமிழரசுக் கட்சிக்குள்ளிருக்கும் தலைமைத்துவப் போட்டியினால் இரண்டு அணிகளும் தத்தம் தெரிவுகளை முன்வைத்து இந்தப் பிரசாரத்தைச் செய்கின்றன.

ஏனையோருக்கு கட்சிகளே இல்லை. முதலமைச்சர் வேட்பாளர் என்பது ஜனாதிபதி வேட்பாளர் இல்லை, தனியொருவருக்கு விழுகின்ற வாக்குகளின் அடிப்படையில் தேர்வாகுவதற்கு. இந்த அடிப்படைப் புரிதலே பலரிடத்திலும் இல்லை. இந்த நிலையில்தான் இந்தக் கோமாளித்தனங்கள் எல்லாம் நடக்கின்றன.

இத்தோடு இந்தப் பட்டியல் நின்று விடாமல், மேலும் நீள்வதற்கான வாய்ப்புகளே அதிகமாக உள்ளது. இந்தப் பட்டியலை வைத்துக் கொண்டு தமிழ்ச் சமூக வலைத்தள வெளியில் கழுவி ஊற்றுதல், காய்தல், எதிர்த்தல், கண்டித்தல், ஆதரவு தெரிவித்தல் என எல்லாமே நடந்து கொண்டிருக்கின்றன. முன்மொழியப்பட்டவர்களில் யார் தகுதிக்குரியவர்? மக்கள் மீதான கரிசனையும் அரசியல் திறனும் மக்களுக்கான அரசியல், சமூகப் பணிகளை ஆற்றிய பின்புலமும் யாரிடம் உள்ளது? என்ற எந்த ஆய்வும் இல்லாமலே கட்சி கட்டுதல் நடந்தேறுகிறது.

இப்படியான கோமாளித்தனங்களில் தமிழ்ச் சமூகம் தன்னுடைய நேரத்தையும் சக்தியையும் எப்படியெல்லாம் வீணடித்துக் கொண்டிருக்கிறது! முப்பது ஆண்டுக்கு மேலாகப் பெரும் போராட்டமொன்றை நடத்திய சமூகமா இது என்ற கேள்வி எழுகிறது.

புகலிடத் தேசங்களில் உள்ள புலம்பெயர் மக்கள் இந்தப் பந்தயத்தைக் கையில் எடுத்து நடத்துவதற்குத் தயாராகி விட்டனர். கடந்த சில மாதங்களுக்கு முன்பு நீதிபதி இளஞ்செழியன் லண்டனுக்குச் சென்றபோது, அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பிலும் அப்போது பேசப்பட்ட விடயங்களிலும் அவரை முதலமைச்சர் வேட்பாளராக்க வேண்டும் என்ற கதைகள் பரவலாக்கப்பட்டன. இளஞ்செழியனுக்கு மட்டுமல்ல, அருச்சுனாவுக்கு, சுமந்திரனுக்கு, சிறிதரனுக்கு, றீச்சா பாஸ்கரனுக்கு என ஒவ்வொருவருக்கும் புகலிட நாடுகளில் காசு கட்டுகின்றவர்கள் உள்ளனர். ஆகவே இங்கே தாயக மண்ணில் இருப்போரை விடவும் புலம்பெயர் மக்களில் ஒருசாரார்தான் முதலமைச்சர் வேட்பாளர் விடயத்தில் மும்முரமாக நிற்கிறார்கள். ஒவ்வொரு அணியும் ஒவ்வொரு வேட்பாளர்களையும் பந்தயக் குதிரைகளாக்குகின்றன. இது ஒரு பொழுதுபோக்காகி விட்டது. அந்தளவுக்கு ஈழத்தமிழரின் அரசியல் கீழிறங்கி விட்டது.

இதிலே துயரமும் வேடிக்கையும் வெட்கமும் என்னவென்றால், மாகாணசபைகளுக்கான தேர்தல் என்பது, இலங்கையில் உள்ள ஒன்பது மாகாண சபைகளுக்குமானது. ஆக ஒன்பது முதலமைச்சர்களைத் தேர்வு செய்வதற்குரியது. அதில் ஒன்று கிழக்கு மாகாணசபைக்கும் உரியது. இவர்கள் பேசிக் கொண்டிருப்பதோ வடக்கு மாகாணசபைக்கு மட்டுமான முதலமைச்சர் வேட்பாளரைப் பற்றியும் அதற்கான தெரிவைப்பற்றியுமே. இதுவரையில் பரிந்துரைக்கப்பட்ட வேட்பாளர்களும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களே. என்றால் இவர்களுடைய சிந்தனை எப்படி உள்ளது? இது வழமையைப்போல யாழ்ப்பாணத்துக்குள் குதிரை ஓட்டுவதுதானே!

"வடக்கு- கிழக்கு இணைந்த தமிழர் தாயகம், வடக்குக் கிழக்கு இணைப்பைப் பிரிக்கவே முடியாது. வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகத்தின் உயிர்நாடி…" என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பது உண்மையா? அல்லது இதெல்லாம் பழைய கரடி விடுகிற கதைதானா?

இந்த மாதிரியான குறுகிய, தவறான செயற்பாடுகள், சிந்தனைகளால்தான் "கிழக்கு வேறு. வடக்கு வேறு" என்ற எண்ணமும் நிலைப்பாடும் கிழக்கில் உள்ள ஒரு சாராரிடம் எழுந்து வலுப்பெற்றது. அதாவது, அதொரு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய நியாயம். அந்த எண்ணமும் நிலைப்பாடும் சரியானதுதான் என ஏனையோரையும் அந்தப் பக்கமாகத் திரள்வதற்குத் தூண்டும் செயல்களே இவையாகும்.

இந்தத் தவறுகளைச் சீர்ப்படுத்திக் கொள்ளாமல், "கிழக்குப் பிரிவினை, பிரதேசவாதத்தைத் தூண்டுதல்" என்றெல்லாம் பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை. உண்மையில் பிரிவினையும் பிரதேச வாதமும் எங்கே இருந்து உருவாகிறது? நிச்சயமாக அது வடக்கில் இருந்து, யாழ்ப்பாணத்தில் இருந்தே உருவாகிறது. ஆனால், பழி மட்டும் எப்போதும் கிழக்கின் தலையில் கட்டப்படுகிறது.

இந்த இடத்தில் இந்தத் தவறைக்குறித்துப் பேச வேண்டியது யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டியங்கும் தமிழ் சிவில் சமூகத்தினரும் வடக்கு-கிழக்கு தமிழர் தாயகம் என்ற நிலைப்பாட்டைக் கொண்டோரும் யாழ்ப்பாணத்து ஊடகங்களுமாகும். அத்துடன், பல்கலைக்கழக சமூகத்தினர் தொடக்கம் தமிழ்த்தேசியவாதத் தரப்பினர் அனைவருமாகும். இவர்கள் எல்லோரும் கிழக்கையும் பிரதிநிதித்துவப்படுத்திச் சிந்தித்து வந்திருக்கிறார்கள். ஆனால், கிழக்கை ஆழ்மனதில் - சமனிலையில் - கொண்டிருக்கத் தவறி விடுகிறார்கள். "பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை" என்று கலர் புல்லாக நிகழ்ச்சிகளை நடத்துவது முக்கியமில்லை. பொத்துவிலையும் பொலிகண்டியையும் உணர்வினாலும் நீதியான அணுகுமுறையினாலும் சமத்துவ நோக்கினாலும் இணைத்துக் கொள்வதே முக்கியமானது.

இல்லையென்றால் இப்போது சொல்லுங்கள், வடக்கு மாகாண சபைக்கு பல முதலமைச்சர் வேட்பாளர்களைப் பற்றிச் சிந்திக்கிறீர்களே! கிழக்குக்கு ஒரேயொரு பெயரைக் கூடச் சிந்தித்திருக்கிறீர்களா? அப்படிச் சிந்திக்க முடியாமல் போனது ஏன்?

ஏனென்றால், உள்ளத்தில் உள்ளதே வெளியே வரும். உள்ளத்தில் என்ன இருக்கிறதோ, அதுவே வெளியே வந்திருக்கிறது் வந்து கொண்டிருக்கிறது. உள்ளம் திருந்தாத வரையில் உலகம் திருந்தாது என்று தெரியாமலா சொன்னார்கள்.

இவையெல்லாவற்றுக்கும் அப்பால், இங்கே நாம் கவனிக்க வேண்டிய இன்னொன்றும் உள்ளது. இந்த மாதிரியான குறுகிய சிந்தனையும் பொருந்தாக் குணங்களும் பிரித்தாள முற்படும் சிங்களத் தரப்புக்கு வாய்ப்பாகி விடும். கிழக்கை தென்னிலங்கை மேலும் தூரப்படுத்துவதற்கு இவை இலகுவாகும்.

ஏற்கனவே குறுகிய சிந்தனையின் அடிப்படையில் நட்புச் சக்திகளையெல்லாம் விரோதமாக்கிய தமிழ்த்தேசியவாத அரசியல் சிங்களத் தரப்பையே பலப்படுத்தியது. அதிலிருந்து எத்தகைய பாடங்களையும் அது இன்னும் படித்துக் கொள்ளவில்லை. வரலாற்றிலிருந்து எதையும் படித்துக் கொள்ளவில்லை என்றால், திரும்பத்திரும்பத் தவறுகளே நடக்கும். அதுவே தமிழ் அரசியலிலும் நடந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் பார்த்து சிங்களச் சமூகம் கைகொட்டித்தான் சிரிக்கும். மாகாண சபையும் முதலமைச்சர் கனவுகளும் என்பதை நினைக்க நமக்கும் சிரிப்புத்தான் வருகிறது. கூடவே அடக்க முடியாத கோபமும்.

தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:08 அதிர்வு: 110 ஆவணி 2026 தொ.பே:1800 960 162

‘செம்மணி நீதியின் ஓலமும்’ புலம்பெயர் அமைப்புகளின் கள்ள மௌனமும்!

ஆயுதப் போராட்டமும் அறவழிப் போராட்டமும் மௌனிக்கப்பட்ட பின்னர், ஈழத்தமிழினத்தின் இருப்புக்கான அடுத்தகட்டக் களம் ‘இராஜதந்திர சமர்’ மட்டுமே என்பதை வரலாறு நமக்குத் தெள்ளத்தெளிவாக உணர்த்தியிருக்கிறது.

தமிழ் மண்ணில் சிந்தப்பட்ட குருதியும், அநியாயமாகக் கருவறுக் கப்பட்ட உயிர்களும் நமக்குத் தந்துசென்ற ஒரே வாய்ப்பு – சர்வதேச அரங்கில் நீதியைக் கோரி நிற்கும் இந்த இராஜதந்திரப் பலம்தான்.

ஆனால், அந்தப் பலத்தை நாம் சரியாகப் பயன்படுத்துகிறோமா அல்லது சுயநல அரசியல் விளையாட்டுகளுக்குப் பலிகடா ஆக்குகிறோமா எனும் கடுமையான கேள்வியை இன்றைய சூழல் நம்முன் நிறுத்தியுள்ளது.

தாயகத்தில், தமிழர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணப் பொது நூலகத்திலிருந்து புறப்பட்ட ‘நீதியின் ஓலம்’ பேரணி, ஐக்கிய நாடுகள் சபையின் யாழ். பணியகத்தை வந்தடைந்து நிறைவுற்றிருக்கிறது.

சர்வதேசக் கண்காணிப்பின்கீழ் செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் சர்வதேச விசாரணை கோரியும், கடந்தகாலப் போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக்கூற வலியுறுத்தியும் மனுவொன்று கையளிக்கப்பட்டுள்ளது.

செம்மணியில் இதுவரை 582 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டு, 573 எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டிருக்கும் அதிர்ச்சியூட்டும் சான்றுகள், தமிழினத்திற்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைக்கு எவராலும் மறுக்க முடியாத ஆவணமாக உலகிற்கு முன்னால் நிற்கின்றன.

நாம் சர்வதேச சமூகத்திடம் “தமிழர்களுக்கு எதிராக இனப்படுகொலை நடந்தது” என வாய்மொழியாக வாதாடுவதை விட, செம்மணியில் புதைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு எலும்புக்கூடும் அதை உரக்கப் பேசுகின்றது.

ஆனால், தாயகத்தில் உறவுகள் தமது சொந்த நிலத்தில், அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் ‘நீதியின் ஓலம்’ என வீதியில் இறங்கிப் போராடும்போது, புலம்பெயர் தேசம் என்ன செய்து கொண்டிருக்கிறது?

ஆயுதப் போராட்டக் காலத்தில், புலம்பெயர் தமிழ்ச் சமூகம் ஒரே குடையின்கீழ் திரண்டு நின்றது. நிதி திரட்டல், நிர்வாக ஒழுங்கு, சர்வதேசப் பரப்புரை என அனைத்திலும் ஒப்பற்ற நேர்த்தியும் அர்ப்பணிப்பும் நிலவின. சுயநலமோ, தனிநபர் லாபமோ அங்கு முதன்மை பெறவில்லை மாறாக தாயக விடுதலையும் மண் பற்றும் மட்டுமே மேலோங்கியிருந்தன.

போரின் முடிவுக்குப் பின்னரும்கூட, தாயகத்தில் முன்னெடுக்கப்பட்ட அரசியல் உரிமைப் போராட்டங்களுக்கும், சர்வதேச நீதி கோரும் நகர்வுகளுக்கும் புலம்பெயர் சமூகமே முதுகெலும்பாகத் திகழ்ந்தது. ஆனால், இன்றோ அந்த வீச்சு எங்கே போயிற்று?

புலம்பெயர் தேசங்களில் வாழும் தமிழ்ச் சமூகம் இன்று பல்வேறு குழுக்களாகவும், கட்சிகளின் முகவர்களாகவும் சிதறிச் சின்னா பின்னமாகி நிற்கின்றது. தாயகத்தில் உள்ள தேசியக் கட்சிகள் தங்களுக்குள் பிளவுபட்டு நிற்பதை முதன்மைப்படுத்தி, இங்குள்ளவர்களும் தத்தமது கோஷ்டி அரசியலை வளர்ப்பதிலேயே காலத்தைக் கடத்துகின்றனர்.

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டமும், நீதி கோரும் நகர்வுகளும் இன்று சிலருக்கு அரசியல் விளையாட்டாகவும், பொழுதுபோக்கு அம்சமாகவும் மாறிப்போயிருப்பது கசப்பான, ஆனால் மறுக்க முடியாத உண்மையாகும்.

உணர்ச்சிப்பூர்வமாக முன்னெடுக்கப்பட்ட வீதிப் போராட்டங்கள் எல்லாம், இன்று வெறுமனே சமூக வலைத்தளப் படங்களுக்காகவும், ஊடகச் செய்திகளுக்காகவும் நடாத்தப்படும் சடங்குகளாகச் சுருங்கிவிட்டன.

தெருவிழாக்களையும், வெளிநாட்டுப் பாடகர்களை வரவழைத்துக் கூத்தடிப்பதையும் பிரம்மாண்டமாக ஏற்பாடு செய்யும் அமைப்புகளுக்கும் தலைவர்களுக்கும், செம்மணிப் புதைகுழியில் புதைக்கப்பட்ட நம் சொந்தங்களின் நீதி கோரி ஒரு தொடர் போராட்டத்தையோ, சர்வதேசத் தூதரகங்களின் கதவுகளைத் தட்டும் ஒருங்கிணைந்த நகர்வுகளையோ முன்னெடுக்க முடியாமல் போனது ஏன்?

குறிப்பாக, ஆஸ்திரேலியா வாழ் தமிழ்ச் சமூகத்தின் அணுகுமுறை பெரும் கவலையையும் வேதனையையும் அளிக்கிறது. தாயகத்திலிருந்து வரும் ‘நீதியின் ஓலம்’ செய்திகளை வெறும் செய்தித்தாள்களிலும், கைபேசித் திரைகளிலும் வாசித்துவிட்டு, ‘லைக்’ போட்டுவிட்டு அடுத்த வேலையைப் பார்க்கக் கடந்து செல்லும் ஒரு சராசரிப் பார்வையாளனாகவே இங்குள்ள பலரின் வாழ்க்கை சுருங்கிவிட்டது.

நாம் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும் எதிரிக்குத் தேவை நமது பிளவுதான். ‘ஒற்றுமை’ என்ற ஆயுதம் நமது கைகளில் இல்லாதவரை, சர்வதேச அரங்கில் நாம் முன்வைக்கும் எந்தக் கோரிக்கையும் வலுப்பெறப் போவதில்லை.

இராஜதந்திர சமரில் வெல்வதற்கும், போர்க்குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கும், சமஷ்டித் தீர்வு உள்ளிட்ட அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கும் ‘ஒற்றுமை’ மட்டுமே ஒரே வழிமுறை.

தாயக உறவுகள் களத்தில் நின்று போராடுகிறார்கள் அவர்களுக்குப் பின்னணியாக நின்று சர்வதேச அளவில் அரசியல் அழுத்தத்தைக் கொடுக்க வேண்டிய முதன்மைப் பொறுப்பு புலம்பெயர் தமிழர்களுக்கே உண்டு. எனவே, ஆஸ்திரேலியா வாழ் தமிழ்ச் சமூகமும், ஏனைய புலம்பெயர் அமைப்புகளும் குறுகிய அரசியல் லாபங்களையும், தனிநபர் முரண்பாடுகளையும் கடந்து உடனடியாக ஓரணியில் திரள வேண்டும். செம்மணி சுட்டிக்காட்டும் நீதிக்கான சாட்சியத்தை சர்வதேச சமூகத்தின் மனசாட்சியின் முன் உரக்கப் பேசுவதற்கான இராஜதந்திர நகர்வுகளை விரைந்து ஒருங்கிணைப்பதே, நாம் போரில் மடிந்த சொந்தங்களுக்குச் செய்யும் உண்மையான அஞ்சலியாக இருக்கும்!

குயின்ஸ்லாந்து மாகாணத்தில் மூவேந்தர்களின் வெண்கொற்ற கொடை திருவிழா

குயின்ஸ்லாந்து மாகாணத்தில் நடைபெறும் பன்முக கலாச்சார நிகழ்வுகளுக்கு மகுடம் சேர்க்கும் வகையில் ஆண்டுதோறும் நடைபெறுவது Luminous lantern parade விழா.

குயின்ஸ்லாந்து பன்முக பண்பாட்டு மாதமான ஜூலை மாதத்தில் நடைபெறும் இந்த விழாவில், தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக இந்தப் பேரணியை தொடங்கி வைக்கும் பெருமையை B.E.A.T.S இயக்கம் பெற்று வருகின்றது.

ஒவ்வொரு ஆண்டும் நாங்கள் மேற்கொண்டு வரும் பறை இசை உடன் கூடிய தமிழர் அடையாளம் மற்றும் பண்பாட்டு காட்சிப்படுத்துதல் போல இந்த ஆண்டு பண்பாட்டுப் பேரணியில் தமிழர்களின் மூவேந்தர்களின் வெண்கொற்ற கொடையை தெற்கு கரையில் ஏற்பாடு செய்யப்பட்டது. இது பாண்டிய மரபினர்களின் தொடர்ச்சி மற்றும் தமிழர் பண்பாடான இந்திர விழாவின் நீட்சியானது. ஒவ்வொரு வருடமும் பறையாட்டம் ஒயிலாட்டம் மற்றும்

(07ஆம் பக்கம் பார்க்க)

இணைய வழியூடாக கேட்டு மகிழுங்கள்
Thamilaruvi Radio Germany
தமிழருவி வானொலி ஜெர்மனி

வாசகர் களம்

எதிரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர் களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துகள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி
ஆசிரியர்பீடம், எதிரொலி

editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175

குயின்ஸ்லாந்து மாகாணத்தில் முவேந்தர்களின் வெண்கொற்ற கொடை திருவிழா

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

கரகாட்டத்துடன் நடைபெறும் இந்த வெண்கற்ற கொடை திருவிழா, பொய்க்காமல் மழை தர வல்லது என்பது தெற்கத்தி தமிழர்களின் நம்பிக்கையாக இருந்து வந்தது. அதே நம்பிக்கையுடன் இந்த வருடம் நமது ஆஸ்திரேலியா “el nino” சூழல் மாற்றத்தால் எதிர்கொள்ளவருக்கும் வெப்பத்தாக்கம் மற்றும் மழை குறைவிலிருந்து பாதுகாப்பு வேண்டிய பொறுப்புக்கள் குறித்த காட்சிப்படுத்தினோம்.தமிழர் பண்பாட்டு மறு மலர்ச்சி! தமிழர் என்ற உணர்ச்சி! ஆகியவையே எங்கள் இசையமைப்பின் இயக்கத்திற்கு ஆன்மாவும் குறிக்கோளாகவும் இருக்கின்றன.

ELECTRICAL SERVICES

We provide professional, safe, and reliable electrical installation and maintenance services.

H&H Power Pty Ltd

RENEWABLE ENERGY SOLUTIONS

Our team provides seamless installation, ensuring your new system integrates perfectly for optimal performance



- DOMESTIC
- COMMERCIAL
- INDUSTRIAL

OUR SERVICE

- Electrical Installation
- Electrical Maintenance
- Electrical Repair & Troubleshooting
- Solar & Battery Installation

BOOK NOW

0405815531

www.hhpower.com.au

Email : admin@hhpower.com.au

Sai Shree Foods

Pty. Ltd.

AUSTRALIA - CANADA - INDIA

REMARKABLE QUALITY AND RELISHING TASTE.

If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

HEAD OFFICE: Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

DISTRIBUTORS: Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

அவுஸ்திரேலிய புதிய குடியேற்ற அரசியல்:
தென் ஆசிய மக்களுக்கான கதவுகள் மூடப்படுகின்றனவா?

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

(தற்போதைய ஆளும் லேபர் அரசின் குடியேற்றக் கொள்கை மாற்றம் , நிகழ்கால பொருளாதாரத் தேவையா, அரசியல் அழுத்தமா, அல்லது ஆசிய எதிர்ப்பு மனப்போக்கா என்பதை அறிவது கடினமாகவே இருக்கிறது)

அவுஸ்திரேலியா என்ற நவீன தேசத்தின் உருவாக்கத்திலும் வளர்ச்சியிலும் குடியேற்றம் மிக முக்கியமான பங்கைக் கொண்டுள்ளது. ஐரோப்பிய குடியேற்றத்தின் ஆரம்ப காலத்திலிருந்து இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய பெருமளவிலான குடியேற்றம் வரை, உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த மக்கள் அவுஸ்திரேலியாவின் பொருளாதாரத்தையும் சமூக அமைப்பையும் மாற்றியமைத்துள்ளனர். குறிப்பாக 1970களில் “White Australia Policy” முற்றாகக் கைவிடப்பட்ட பின்னர், ஆசிய நாடுகளிலிருந்து வந்த குடியேற்ற மக்கள் அவுஸ்திரேலியாவின் பல்துறை சமூகத்தின் முக்கியமான அங்கமாக மாறினர்.

ஆனால் இன்று அவுஸ்திரேலிய குடியேற்றக் கொள்கை ஒரு புதிய திருப்புமுனையை எதிர்கொள்கிறது. பிரதமர் அந்தோனி அல்பனீஸ் தலைமையிலான லேபர் அரசு, COVID-19 பெருந்தொற்றுக்குப் பின்னர் வேகமாக அதிகரித்த குடியேற்றத்தை கட்டுப்படுத்தவும், குடியேற்ற அமைப்பை மறுசீரமைக்கவும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மாணவர் விசாக்கள், பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கான தற்காலிக விசாக்கள், குடும்ப உறுப்பினர்களின் வருகை, திறமையான குடியேற்றம் உள்ளிட்ட பல துறைகளில் கட்டுப்பாடுகள் மற்றும் புதிய விதிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதனால் ஒரு முக்கியமான அரசியல் கேள்வி எழுந்துள்ளது. அவுஸ்திரேலியா தனது குடியேற்ற அமைப்பை ஒழுங்குபடுத்துகிறதா? அல்லது ஆசிய நாடுகளிலிருந்து வரும் மக்களின் குடியேற்றத்தை மறைமுகமாகக் கட்டுப்படுத்துகிறதா?

இந்தக் கேள்விக்கு எளிமையான பதில் இல்லை என்றே கூறலாம்.

குடியேற்ற எண்ணிக்கையிலிருந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட குடியேற்றம் நோக்கி அவுஸ்திரேலியாவும் நகர்ந்து கொண்டிருக்கிறது. COVID-19 காலத்தில் அவுஸ்திரேலியாவின் சர்வதேச எல்லைகள் நீண்டகாலம் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. எல்லைகள் மீண்டும் திறக்கப்பட்ட பின்னர் மாணவர்கள், திறமையான தொழிலாளர்கள் மற்றும் தற்காலிக விசா வைத்திருப்பவர்கள் பெருமளவில் அவுஸ்திரேலியாவுக்கு வந்தனர். இதன் விளைவாக நிகர வெளிநாட்டு குடியேற்றம் (Net Overseas Migration) வரலாற்று ரீதியாக உயர்ந்தது.

இந்த அதிகரிப்பு வீட்டு வசதி, வாடகை, பொது போக்குவரத்து, சுகாதாரம், கல்வி மற்றும் உட்கட்டமைப்பு மீது அழுத்தத்தை ஏற்படுத்தியதாக அரசியல் விவாதம் உருவானது. இதனைத் தொடர்ந்து லேபர் அரசு குடியேற்றக் கொள்கையை எண்ணிக்கையை அதிகரிக்கும் குடியேற்றம் என்ற அணுகுமுறையிலிருந்து தேவைக்கேற்ப தேர்ந்தெடுக்கப்படும் குடியேற்றம் என்ற அணுகுமுறைக்கு நகர்த்தத் தொடங்கியது.

2025-26 நிரந்தர குடியேற்றத் திட்டத்தில் 185,000 இடங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அதில் 132,200 இடங்கள் திறமையான குடியேற்றப் பிரிவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அரசு வெளிப்படுத்தும் செய்தி தெளிவானது. அவுஸ்திரேலியாவுக்கு குடியேற்றம் இன்னும் தேவை ஆனால் எந்த வகையான குடியேற்றம் தேவை என்பதை அரசு தீர்மானிக்க விரும்புகிறது.

கல்வியா - குடியேற்றப் பாதையா?

இந்த புதிய கொள்கையின் மையத்தில் சர்வதேச மாணவர் விசா உள்ளது. முக்கியமாக இந்தியா, சீனா, நேபாளம், பிலிப்பைன்ஸ், வியட்நாம், இலங்கை, பங்களாதேஷ் உள்ளிட்ட ஆசிய நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஆண்டுதோறும் அவுஸ்திரேலியாவுக்கு வருகின்றனர். சர்வதேச கல்வித்துறை பல்கலைக்கழகங்களுக்கும் கல்லூரிகளுக்கும் மட்டுமல்லாமல், வாடகை வீடுகள், போக்குவரத்து, உணவகங்கள், சில்லறை வணிகம் மற்றும் பிற சேவைத் துறைகளுக்கும் பெரும் பொருளாதார பங்களிப்பை வழங்குகிறது.

ஆனால் அரசியல் ரீதியாக மாணவர் விசா தற்போது ஒரு வேறுபட்ட கோணத்தில் பார்க்கப்படுகிறது. கல்விக்காக வந்த ஒருவர் பட்டப்படிப்பு முடிந்த பின்னர் Graduate Visa பெற்று அவுஸ்திரேலியாவில் பணிபுரியலாம் பின்னர் நிரந்தர குடியேற்றத்திற்கான வாய்ப்பையும் நாடலாம். இதனால் மாணவர் விசா, கல்வி விசாவாக மட்டுமல்லாமல், எதிர்கால குடியேற்றத்திற்கான ஒரு வாயிலாகவும் செயல்படுகிறது. இதனால்தான் மாணவர் விசா வழங்கும் முறையில் கடுமையான பரிசீலனைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. கல்வித் தகுதி, உண்மையான கல்வி நோக்கம், ஆங்கில மொழித்திறன், நிதி நிலை மற்றும் படிப்பின் பொருத்தம் போன்ற அம்சங்கள் அதிக கவனத்துடன் பரிசீலிக்கப்படுகின்றன.

இன்றைய குடியேற்ற விவாதத்தில் மாணவர் மட்டும் முக்கியமானவர் அல்லர். அவருடன் வரும் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அரசின் கவனத்தைப் பெற்றுள்ளது.

குறிப்பாக Graduate ஏளைய வைத்திருப்பவர்களுடன் வரும் secondary applicants எண்ணிக்கை அதிகரித்திருப்பது, தற்காலிக குடியேற்றத்தின் உண்மையான அளவைப் பற்றிய புதிய விவாதத்தை உருவாக்கியுள்ளது.

இதனால் அரசு மற்றும் குடியேற்ற விமர்சகர்கள் ஒரு புதிய கணக்கீட்டை முன்வைக்கின்றனர். ஒருவர் மாணவராக வருவது மட்டுமல்ல அவருடன் எத்தனை பேர் வருகிறார்கள், அவர்கள் எவ்வளவு காலம் தங்குகிறார்கள், அவர்களின் வேலை மற்றும் வீட்டுத் தேவைகள் என்ன என்பதும் கணக்கில் கொள்ளப்பட வேண்டும். இதுவே குடியேற்றக் கட்டுப்பாட்டின் புதிய பரிமாணமாக மாறியுள்ளது.

ஆசிய எதிர்ப்பு கொள்கையா?

இங்குதான் மிக முக்கியமான அரசியல் கேள்வி எழுகிறது. சட்டரீதியாக அவுஸ்திரேலிய குடியேற்ற விதிகள் ஆசியர்களுக்கு எதிரானவை என்று கூறுவதற்கு நேரடி ஆதாரம் இல்லை. தற்போதைய விதிகள் பொதுவாக திறமை, தொழில் தேவை, கல்வித் தகுதி, வருமானம், ஆங்கில மொழித்திறன், வேலை வாய்ப்பு மற்றும் விசா நிபந்தனைகள் போன்ற அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. Skills in Demand ஏளைய போன்ற திட்டங்கள், அவுஸ்திரேலியாவில் தேவைப்படும் திறமையான தொழிலாளர்களை வெளிநாடுகளில் இருந்து கொண்டு வருவதற்காகவே தொடர்கின்றன. எனவே சட்டத்தின் மொழியில் இது இன அடிப்படையிலான குடியேற்றக் கட்டுப்பாடு என்று கூறுவது சரியானதல்ல.

ஆனால் ஒரு கொள்கையின் நோக்கம் மற்றும் அதன் நடைமுறை விளைவு இரண்டும் ஒரே மாதிரியானவை அல்ல.

சர்வதேச மாணவர் குடியேற்றத்தை கட்டுப்படுத்தும் கொள்கைகள், ஆசிய நாடுகளிலிருந்து வரும் மக்களை அதிகமாகப் பாதிக்கக்கூடும். ஏனெனில் அவுஸ்திரேலியாவின் சர்வதேச மாணவர் சந்தையில் ஆசிய நாடுகளின் பங்கு மிகப் பெரியது.

இதனால் கொள்கை இனப்பாகுபாடற்றதாக இருந்தாலும் அதன் தாக்கம் இன அல்லது பிராந்திய ரீதியாக சமமற்றதாக இருக்கிறதா என்ற கேள்வி எழுகிறது.

White Australia Policy-யின் வரலாற்று நிழல்:

இந்த அச்சத்தை ஆசிய சமூகங்கள் வரலாற்றிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. அவுஸ்திரேலியா ஒரு காலத்தில் வெளிப்படையான வெள்ளையர் முன்னுரிமைக் குடியேற்றக் கொள்கையைப் பின்பற்றிய நாடாக இருந்தது. ஆசிய குடியேற்றம் மீது பல்வேறு கட்டுப்பாடுகள் இருந்தன. பின்னர் அந்தக் கொள்கை கைவிடப்பட்டு, பல்துறை குடியேற்ற நாடாக அவுஸ்திரேலியா மாறியது. இன்று இந்தியர், சீனர், வியட்நாமியர், பிலிப்பைன்ஸ், கொரியர், இலங்கையர், நேபாளி உள்ளிட்ட ஆசிய சமூகங்கள் அவுஸ்திரேலியாவின் பொருளாதாரத்திலும் சமூகத்திலும் ஆழமாகப் பதிந்துள்ளன. எனவே புதிய குடியேற்றக் கட்டுப்பாடுகள் வரும்போது, இது மீண்டும் பழைய அவுஸ்திரேலியாவை நோக்கிய நகர்வா என்ற அச்சம் சில சமூகங்களில் உருவாகுவது புரிந்துகொள்ளத்தக்கது.

லேபர் அரசின் குடியேற்றக் கொள்கையைப் புரிந்துகொள்ள வீட்டு வசதி நெருக்கடியை கவனிக்காமல் இருக்க முடியாது. மக்கள் தொகை வேகமாக அதிகரிக்கும்போது அதற்கேற்ப வீடுகள் கட்டப்படவில்லை என்றால், வீட்டுத் தேவை அதிகரிக்கும். இதன் விளைவாக வாடகை உயரலாம் வீடு வாங்கும் திறன் குறையலாம் குறைந்த வருமானக் குடும்பங்கள் அதிக அழுத்தத்தை எதிர்கொள்ளலாம்.

இதனால் குடியேற்றம் வாழ்க்கைச் செலவு மற்றும் வீட்டு வசதி பிரச்சினையுடன் நேரடியாக இணைக்கப்படுகிறது. ஆனால் இதிலும் ஒரு முரண்பாடு உள்ளது. வீடுகளை கட்டுவதற்கு தொழிலாளர்கள் தேவை. கட்டுமானம், சுகாதாரம், முதியோர் பராமரிப்பு, தகவல் தொழில்நுட்பம், பொறியியல் உள்ளிட்ட பல துறைகளில் அவுஸ்திரேலியாவுக்கு வெளிநாட்டு திறமையான தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். அதனால் அரசின் உண்மையான சவால் குடியேற்றத்தை நிறுத்துவது அல்ல.

எந்த திறமை கொண்டவர்கள் எவ்வளவு எண்ணிக்கையில் தேவை என்பதுதான்.

One Nation கட்சி அழுத்தம்:

இந்த மாற்றங்களை அரசியல் சூழலிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. Pauline Hanson தலைமையிலான One Nation கட்சி நீண்டகாலமாக அதிகமான குடியேற்றத்திற்கு எதிரான நிலைப்பாட்டை முன்வைத்து வருகிறது. குடியேற்றம், மக்கள் தொகை வளர்ச்சி, வீட்டு வசதி மற்றும் கலாசார மாற்றம் ஆகியவற்றை இணைத்து வாக்காளர்களிடம் அரசியல் ஆதரவைப் பெறும் முயற்சி தீவிரமடைந்துள்ளது.

One Nation-ன் வளர்ச்சி, Coalition மற்றும் லேபர் ஆகிய இரு பிரதான கட்சிகளுக்கும் அழுத்தத்தை உருவாக்குகிறது. லேபர் அரசு One Nation-ன் முழுமையான குடியேற்ற எதிர்ப்பு அணுகுமுறையை ஏற்கவில்லை என்றாலும், குடியேற்றம் தொடர்பான பொதுமக்களின் கவலைகளை புறக்கணிக்க முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. இதனால் லேபர் கட்சி தனது குடியேற்றக் கொள்கையை அரசியல் மையப்பகுதிக்குக் கொண்டு வருகிறது.

ஆசிய குடியேற்றத்தின் பொருளாதாரப் பங்களிப்பு

இருப்பினும் ஆசிய குடியேற்றத்தை வெறும் எண்ணிக்கையாக மட்டுமே பார்ப்பது மிகப்பெரிய தவறு. ஆசிய குடியேற்ற மக்கள் மருத்துவம், முதியோர் பராமரிப்பு, கட்டுமானம், தகவல் தொழில்நுட்பம், பொறியியல், கல்வி, வணிகம் உள்ளிட்ட பல துறைகளில் பணியாற்றுகின்றனர். அவர்கள் வரி செலுத்துகின்றனர் தொழில்களை உருவாக்குகின்றனர் வீடுகளை வாடகைக்கு எடுக்கின்றனர் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பயன்படுத்துகின்றனர் உள்ளூர்ப் பொருளாதாரத்தில் பங்களிக்கின்றனர்.

சர்வதேச மாணவர்களும் அவுஸ்திரேலிய பொருளாதாரத்திற்கு பெரும் வருவாயை உருவாக்குகின்றனர். எனவே குடியேற்ற சுமை என்ற எளிமையான அரசியல் விளக்கம் முழுமையானதல்ல. குடியேற்றத்தின் நன்மைகளும் செலவுகளும் இரண்டையும் ஒரே நேரத்தில் மதிப்பீடு செய்ய வேண்டும்.

அவுஸ்திரேலிய குடியேற்றக் கொள்கை இனி குடியேற்றத்தை வரவேற்பதா அல்லது மறுப்பதா என்ற இரு முனைக் கேள்வியாக இருக்காது. அதற்கு பதிலாக தேர்ந்தெடுக்கப்பட்ட குடியேற்றம் என்ற புதிய அணுகுமுறை வலுப்பெறலாம். அதாவது அதிக திறமை, அதிக தொழில் தேவை, அதிக பொருளாதார பங்களிப்பு மற்றும் குறைந்த சமூக அழுத்தம் கொண்ட குடியேற்றத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மாணவர் விசா மூலம் நிரந்தர குடியேற்றத்திற்குச் செல்லும் பாதை மேலும் கடினமாகலாம். குடும்ப உறுப்பினர்களின் வருகை மீதான கட்டுப்பாடுகளும் அதிகரிக்கலாம். அதேவேளை மருத்துவம், கட்டுமானம், முதியோர் பராமரிப்பு, தொழில்நுட்பம் போன்ற துறைகளுக்குத் தேவையான திறமையான தொழிலாளர்களுக்கு வாய்ப்புகள் தொடரலாம்.

அல்பனீஸ் தலைமையிலான லேபர் அரசின் புதிய குடியேற்றக் கொள்கையை நேரடியாக ஆசிய மக்களுக்கு எதிரான இனவாதக் கொள்கை என்று வரையறுப்பது அரசியல் ரீதியாகவும் தரவு ரீதியாகவும் மிகைப்படுத்தலாக இருக்கும்.

ஆனால் அதே நேரத்தில், இந்தக் கொள்கைகளின் நடைமுறை விளைவுகள் ஆசிய சமூகங்களின் மீது அதிகமாக விழக்கூடும் என்பதையும் மறுக்க முடியாது. எனவே ஆசிய சமூகங்கள் கேட்க வேண்டிய கேள்வி, எங்களை ஏன் தடுக்கிறீர்கள் என்பதோடு முடிவடையக்கூடாது. குடியேற்றத் தேர்வுக்கான விதிகள் அனைவருக்கும் சமமாகப் பயன்படுத்தப்படுகின்றனவா, பொருளாதாரத் தேவைக்கும் குடியேற்ற எண்ணிக்கைக்கும் இடையே அரசு சரியான சமநிலையைப் பேணுகிறதா, வீட்டு வசதி நெருக்கடியின் முழுப் பொறுப்பும் குடியேற்றத்தின் மீது சுமத்தப்படுகிறதா என்ற கேள்விகளும் எழுப்பப்பட வேண்டும்.

அவுஸ்திரேலியா தனது குடியேற்ற எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் உரிமை கொண்ட நாடு. ஆனால் குடியேற்றக் கட்டுப்பாடு இனக் கட்டுப்பாடாக மாறக்கூடாது. இன்று ஆசிய மக்கள் அவுஸ்திரேலியாவின் வெளிப்புற மக்கள் அல்ல. அவர்கள் இந்த நாட்டின் மருத்துவமனைகளில் பணியாற்றுகின்றனர் பல்கலைக்கழகங்களில் கற்கின்றனர் தொழில்களை நடத்துகின்றனர் வீடுகளை கட்டுகின்றனர் வரி செலுத்துகின்றனர் சமூகங்களை உருவாக்குகின்றனர்.

எனவே அவுஸ்திரேலியாவின் எதிர்கால குடியேற்றக் கொள்கையின் உண்மையான சோதனை, எத்தனை பேரை நாட்டுக்குள் அனுமதிக்கிறது என்பதில் மட்டும் இல்லை யாரை எந்த அளவுகோலின் அடிப்படையில் அனுமதிக்கிறது என்பதிலும் உள்ளது.

குடியேற்றத்தைக் கட்டுப்படுத்துவது ஒரு அரசின் உரிமையாக இருக்கலாம். ஆனால் நியாயமான குடியேற்றக் கொள்கை என்பது கதவுகளை முழுமையாக மூடுவது அல்ல அந்தக் கதவுகள் அனைவருக்கும் ஒரே விதமான நியாயத்துடன் திறக்கப்படுவதை உறுதி செய்வதாகும்.

அந்த சமநிலையை அவுஸ்திரேலியா எவ்வாறு பேணுகிறது என்பதே, பல்துறை அவுஸ்திரேலியாவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் மிக முக்கியமான அரசியல் கேள்வியாக இருக்கிறது. ■

யாழ்ப்பாணம் –காங்கேசன்துறை தையிட்டி திஸ்ஸ விகாரை: நில ஆக்கிரமிப்பும் வரலாற்று உண்மைகளும்

திஸ்ஸ விகாரைக்காக அபகரிக்கப்பட்ட காணிகள்

Image © 2025 Airbus

● சபீர் மொஹமட்

சட்டப் போராட்டமும் தற்போதைய பதற்றமும்

யாழ்ப்பாணம் மாவட்டம், காங்கேசன்துறை தையிட்டி பகுதியில் அமைந்துள்ள திஸ்ஸ விகாரையை மையமாகக் கொண்டு, மீண்டும் இனரீதியான மற்றும் நிலம் சார்ந்த பதற்ற நிலைகள் தலைதூக்கியுள்ளன. விகாரை ஆக்கிரமித்துள்ள பகுதியில் அமைந்துள்ள ‘பவானி வீதி’ எனப்படும் பாதையை மீட்டு, பொதுமக்கள் பாவனைக்காக திறந்து விடுவதற்கு வலிகாமம் வடக்கு பிரதேச சபை எடுத்த நடவடிக்கையே இம்முறை ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு முக்கியமான காரணமாகும்.

இதற்கமைய, கடந்த ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தவிசாளரின் கையொப்பத்துடன், தையிட்டி திஸ்ஸ விகாரையின் விகாராதிபதி ஜின்தோட்ட நந்தராம தேரருக்கு உத்தியோகபூர்வ கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டது. எனினும், வீதிக்கான தடையை நீக்க விகாரைத் தரப்பினர் தொடர்ந்தும் மறுப்புத் தெரிவித்து வந்தனர்.

இதனைத் தொடர்ந்து, பிரதேச சபையின் இந்நடவடிக்கைக்கு எதிராக பலாலி பொலிஸார் மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தை நாடினர். விகாரை வளாகத்தின் ஊடாக வீதியை அமைப்பது அமைதியைச் சீர்குலைக்கும் எனக் கூறி, பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 81வது பிரிவின் கீழ் பொலிஸாரால் பெறப்பட்ட தடையாணை மற்றும் பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 66வது பிரிவின் கீழ் வீதி அமைக்கும் பணிகளை நிறுத்துமாறு பலாலி பொலிஸார் விடுத்த கோரிக்கை ஆகிய இரண்டையையும் கடந்த ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி தள்ளுபடி செய்த நீதவான் நீதிமன்றம், இது தொடர்பாக உயர் நீதிமன்றத்தை நாடுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டது.

அத்துடன், இவ்வழக்கிலிருந்து வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ. சுகிர்தன் மற்றும் சபையின் செயலாளர் ஆகியோர் விடுவிக்கப்பட்டனர். மேலும், குறித்த வீதியை மேம்படுத்துவதற்கான முழுமையான அதிகாரங்கள் பிரதேச சபைக்கு உண்டு என்றும் மல்லாகம் நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

மல்லாகம் நீதிமன்றத்தின் இத்தீர்ப்புக்கு எதிராக, பலாலி பொலிஸ் நிலையத்தினால் கடந்த 10ஆம் திகதி திங்கட்கிழமை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் வலிகாமம் வடக்கு பிரதேச சபை சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் மற்றும் பிரதேச சபை சட்டத்தரணி ச. கஜேந்திரன் ஆகியோர் ஆஜராகி வாதாடியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மக்கள் போராட்டமும் தென்னிலங்கை அரசியல் தலையீடுகளும்

தென்னிலங்கையிலிருந்து சகல போயா தினங்களிலும் பக்தர்கள் விகாரைக்கு வருகைதந்து வழிபாடுகளை மேற்கொண்டுவரும் அதேவேளையில், தங்களது சொந்த நிலங்களை மீட்டுத் தர வேண்டும் என வலியுறுத்தி, நில உரிமையாளர்களான அப்பிரதேச தமிழ் மக்களின் போராட்டமும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது.

மாதாந்தம் வேண்டுமென்றே பிரச்சினைகளை உருவாக்கும் நோக்கோடு தெற்கிலிருந்து சிங்கள மக்களை ஒருங்கிணைத்து வடக்குக்கு அழைத்து வரும் திட்டமிட்ட நகர்வுகள் இடம்பெற்றுவருவதை அவதானிக்க முடிகிறது. மறுபுறம், வட மாகாணத்தைச் சேர்ந்த வெவ்வேறு அரசியல்வாதிகளும் போயா தினங்களில் இப்போராட்ட களத்தில் ஆஜராவதை காண முடிகின்றது.

இப்பிரச்சினையின் உண்மைத் தன்மையை ஆராயும் நோக்கில் காணி உரிமையாளர்களில் ஒருவரான சருஜன் என்பவரைச் சந்தித்துப் பேசியபோது:

“நாங்கள் சிங்கள மக்களுக்கோ அல்லது பௌத்த மதத்திற்கோ எந்தவிதத்திலும் எதிரானவர்கள் அல்லர். நாங்கள் கேட்பது எங்கள் பரம்பரை நிலங்களை மட்டுமே! இந்த விகாரைக்குச் சொந்தமான நிலங்கள் இதன் பின்புறமாக இருக்கின்றன. அப்படி இருக்கையில் எங்களது நிலங்களை ஏன் பறித்தார்கள்? இது எங்களுடைய நிலம் என்பதை நிரூபிக்கும் ஆவணங்கள் எங்களிடம் இருக்கின்றன. அதற்குச் சான்றாக எங்களது காணிகளில் காணப்பட்ட கிணறுகளின் அடையாளங்கள் இன்றும் அந்த விகாரை வளாகத்தின் உள்ளே இருக்கின்றன,” எனக் கூறித் தனது ஆதங்கத்தைப் பதிவு செய்தார்.

திஸ்ஸ விகாரை குறித்து சமூக வலைத்தளங்களில் பரப்புரை மேற்கொள்பவர்களின் பேச்சுகளில் ‘பௌத்த மதம், கருணை, ஒற்றுமை’ போன்ற வார்த்தைகள் பிரயோகிக்கப்பட்டாலும், அவர்களின் கருத்துகள் சிங்கள பௌத்த தேசியவாதத்தின் ஆழமான அரசியல் இயக்கங்களையே பிரதிபலிக்கின்றன. துலார குணதிலக்க, ஐஸ்வர்யா ஜி. அதிகாரி, மதுபாஷன ரனஹன்ச மற்றும் சானக பண்டாரா போன்றோர் தொடர்ச்சியாகத் தென்னிலங்கையில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிரான கருத்துகளையும் போராட்டங்களையும் முன்னெடுத்து வருபவர்கள் .

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் திருகோணமலையில் இடம்பெற்ற புத்தர் சிலை சார்ந்த சர்ச்சை முதற்கொண்டு, கொழும்பு வெள்ளவத்தையில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வைச் சீர்குலைக்க முயற்சி செய்த நபர்களுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்ட இவர்களில் பெரும்பாலானோர், கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்களாக இயங்குவதுடன், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஊடகப் பிரிவில் பணியாற்றியவர்களும் இதில் அடங்குவர். தற்போதைய சூழலில் இவர்களே சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்திப் போலிப் பிரசாரங்களை மேற்கொண்டு இந்தப் பிரச்சினையை மேலும் பூதாகரமாக்கி வருகிறார்கள்.

வரலாற்றுப் பின்னணியும் மூல ஆவணங்களும்

இந்தச்சர்ச்சையின் வரலாற்று மூலாதாரங்களை ஆராயும்போது, இலங்கையின் வரலாற்று நூலான மகாவம்சத்தில் அனுராதபுரத்தை ஆண்ட மன்னர் தேவநம்பியதீசன் கட்டிய மூன்று விகாரைகளில் ‘திஸ்ஸ மகா விகாரையும்’ ஒன்று எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. புராணக் கதைகளுக்கு அடுத்தபடியாக, 1926 ஆம் ஆண்டு வெளியான Ancient Jaffna எனும் நூலில் முதலியார் எஸ். ராசநாயகம் ‘திஸ்ஸ மளுவா’ என அழைக்கப்படும் இந்தப் பகுதியில்தான் மகாவம்சத்தில் குறிப்பிடப்படும் திஸ்ஸ விகாரை இருந்திருக்க வேண்டும் என்ற தனது அனுமானத்தை எழுதியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து 1946 பெப்ரவரி 18 ஆம் திகதி கொழும்பு நுகேகொடையைச் சேர்ந்த ‘கலகம ஆரச்சிகே ஆபிரஹாம் பெரேரா’ என்பவர் தனக்குச் சொந்தமான 1.25 ஏக்கர் (20 பரப்பு) நிலத்தை யாழ்ப்பாணம் நயினாதீவு நாக விகாரைக்குத் தானமாக எழுதி வழங்கியுள்ளார். அதன்பின்னரே அதே ஆண்டில் களுத்துறை ஸ்ரீலதரதிஸ்ஸ மற்றும் கௌதம பஞ்ஞாதென்ன ஆகிய இரு தேரர்கள் வருகை தந்து, அங்கிருந்த அரச மரத்தைச் சுட்டிக்காட்டி ஒரு சிறிய விகாரையை அமைத்துள்ளனர்.

இந்தத் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக நயினாதீவு நாகதீப ரஜமகா விகாரையின் விகாராதிபதி வணக்கத்துக்குரிய நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸநாயக்க தேரரை நாம் சந்தித்தோம். வரலாற்று நிகழ்வுகளை உறுதிப்படுத்திய அவர், ஆபிரஹாம் பெரேரா நன்கொடையாக வழங்கிய 1.25 ஏக்கர் நில உறுதியின் மூலப்பிரதியை நம்மிடம் காண்பித்தார். மேலும், தையிட்டியில் உள்ள தற்போதைய திஸ்ஸ விகாரை போலியானது என்றும், அந்த நிலம் பொதுமக்களுக்கு உரியது என்றும், உண்மையான திஸ்ஸ விகாரையின் நிலம் அதற்கு மிக அருகில் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், தையிட்டி பிரதேச மக்கள் தன்னை அங்கு வந்து விகாரைக்குச் சொந்தமான இடத்தில் விகாரையை அமைத்துத் தொண்டாற்றுமாறு தொடர்ந்து அழைப்பு விடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள இந்த மக்களுக்கு அரசாங்கமும் உரிய அதிகாரிகளும் முன்வந்து நியாயத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

திஸ்ஸ விகாரை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில், காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை மற்றும் துறைமுகத்தில் பணியாற்றிய சிங்கள பௌத்த மக்கள் சுற்றியுள்ள பகுதிகளில் வாழ்ந்ததுடன், தமிழ் மக்களுடன் எந்தவிதப் பிணக்குகளுமின்றி இணைந்து வழிபாடுகளை மேற்கொண்டுள்ளனர். 1954 ஆம் ஆண்டு இங்கு மிகவும் விமர்சையாக வெசாக் பண்டிகைகூட கொண்டாடப்பட்டுள்ளது.

எனினும், 1956 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட இனக் கலவரங்களைத் தொடர்ந்து வடக்கில் வாழ்ந்த பௌத்த மக்கள் வெளியேறியதால், பராமரிப்பின்றி விகாரைக் கட்டடங்கள் அழிவடைந்தன. பின்னர் 1990களில் தீவிரமடைந்த உள்நாட்டுப் போரினால் அப்பகுதி வாழ் தமிழ் மக்களும் அகதிகளாக வெளியேறினர். 2015 ஆம் ஆண்டிற்குப் பிறகே மக்கள் படிப்படியாகத் தமது சொந்த நிலங்களுக்குத் திரும்ப அனுமதிக்கப்பட்ட போதிலும், விகாரை அமைந்திருந்த பகுதிகள் விடுவிக்கப்படாமல் இராணுவக் கட்டுப்பாட்டிலேயே தொடர்ந்து இருந்து வந்தன.

2017 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தின் போது, அப்போதைய வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தலைமையில் விகாரைக்குரிய ஆவணப்படுத்தப்பட்ட 1.25 ஏக்கர் நிலத்தில் மீண்டும் விகாரை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்ட போதிலும், கட்டுமானங்கள் எதுவும் நடைபெறவில்லை. ஆனால், 2021 ஆம் ஆண்டு கொரோனா ஊரடங்கு அமுலில் இருந்த காலத்தில், திடீரென இலங்கை இராணுவத்தின் முழுமையான பங்களிப்புடன் 100 அடி உயரமான பௌத்த தூபி ஒன்று இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த நிலத்தில் நிர்மாணிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, விகாரைக்குரிய நிலத்தையும் தாண்டி சுற்றியுள்ள தமிழ் மக்களின் தனியார் காணிகளையும் சட்டவிரோதமான முறையில் ஆக்கிரமித்து, இராணுவத்தின் உதவியுடன் பல்வேறு கட்டடங்கள் கட்டப்பட்டதாகப் பாதிக்கப்பட்ட நில உரிமையாளர்கள் குற்றம்சாட்டுகின்றனர். இவை அனைத்தும் முன்னாள் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா உட்பட இராணுவத்தினரின் பூரண அனுசரணையுடனே நடைபெற்றுள்ளன.

வரைபடங்களும் காப்பகச் சான்றுகளும் (Archive Evidence)

தையிட்டி பகுதியில் தற்போது அமைக்கப்பட்டுள்ள விகாரை சட்டபூர்வமானது என வாதிடுபவர்களால் முதன்மையான ஆதாரமாகக் காட்டப்படுவது 1959 ஆம் ஆண்டு இலங்கை நில அளவைத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட ஒரு வரைபடமாகும். இந்த வரைபடத்தின் உண்மைத் தன்மையை ஆராய்வதற்காக நாம் நேரடியாக இலங்கை நில அளவைத் திணைக்களத்திற்குச் சென்று களவாய்வை மேற்கொண்டோம்.

நில அளவைத் திணைக்களத்தின் தலைமை நில அளவைக் கண்காணிப் பாளர் எஸ். சமரசிங்கவைச் சந்தித்து வினவியபோது:

“1959 ஆம் ஆண்டின் வரைபடமானது பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் (1:63,360) என்ற அளவுகோலின் கீழ் அமைக்கப்பட்ட ‘ஒரு மைலுக்கு ஒரு அங்குலம்’ (1 inch to 1 mile) என்ற வரைபடத்தைத் தழுவி உருவாக்கப்பட்டது. அதற்கு முன்னதாகவே, 1896 முதல் 1924 வரை பிரித்தானியர் இலங்கை முழுவதும் பயணம் செய்து உருவாக்கிய இலங்கையின் முதலாவது உத்தியோகபூர்வ வரைபடமும் நில அளவைத் திணைக்களத்தில் பாதுகாப்பாக உள்ளது,” எனத் தெளிவுபடுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, காங்கேசன்துறை பிரதேசத்தின் முதலாவது வரைபடத்தையும், 1959 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்ட வரைபடத்தையும் பார்வையிடுவதற்காக நில அளவைத் திணைக்களத்தின் காப்பகத்தை (Archives) அணுகினோம். எனினும், அங்கிருந்த அதிகாரி ஒருவர், பொலிஸார் மற்றும் அரச புலனாய்வுத் துறையினர் ஏற்கனவே இவ்வரைகலை ஆவணங்களைப் பரிசீலித்துள்ளதாகவும், தேசிய பாதுகாப்பு காரணங்களுக்காக எழுத்துமூலக் கோரிக்கையின்றித் தர முடியாது என்றும் கூறி ஆவணங்களைத் தர மறுத்துவிட்டார்.

இருப்பினும், நில அளவைத் திணைக்கள அதிகாரிகளிடம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (RTI) கீழ் விண்ணப்பம் ஒன்றையும் சமர்ப்பித்தோம். அதேநேரம், இலங்கை தேசிய சுவடிகள் திணைக்களத்தின் காப்பகத்திற்குச் சென்று கள ஆய்வில் ஈடுபட்டோம். பல மணிநேரத் தேடலுக்குப் பிறகு, 1902-1903 ஆம் ஆண்டுகளில் பிரித்தானியரால் வரைந்து தயாரிக்கப்பட்டு, பின்னர் 1924 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்ட இலங்கையின் முதலாவது வரலாற்றுச் சிறப்புமிக்க வரைபடம் நமக்குக் கிடைத்தது.

அந்த வரைபடத்தை ஆழமாக ஆராய்ந்தபோது ஒரு முக்கியமான உண்மை வெளிப்பட்டது: காங்கேசன்துறை தையிட்டி பிரதேசத்தில் எந்தவொரு பௌத்த விகாரையும் அந்த வரைபடத்தில் குறிக்கப்பட்டிருக்க வில்லை. அதேநேரம், தற்போது கட்டப்பட்டுள்ள விகாரையைச் சுற்றிக் காணப்படும் பழமையான இந்துக் கோயில்கள் மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்கள் அனைத்தும் 1902-1924 காலப்பகுதியிலேயே அந்த வரைபடத்தில் மிகத் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும், தற்போது பிரச்சினைக்குரிய ‘பவானி வீதி’ கூட அந்த வரைபடத்தில் மிகத் தெளிவாகக் காணப்படுகின்றது.

வரைபடங்கள் புதுப்பிக்கப்படும் தொழில்நுட்ப நடைமுறைகள் குறித்து நில அளவைத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் பி. எம். பி. உதயகாந்த விளக்கமளிக்கையில், “பழைய தொழில்நுட்பத்தின் மூலம் வரையப்பட்ட ‘ஒரு மைலுக்கு ஒரு அங்குலம்’ வரைபடங்களை

(12ஆம் பக்கம் பார்க்க)

1959 ஆம் ஆண்டு நில அளவைத் திணைக்களத்தால் வெளியாக்கப்பட்டதாக சமூக ஊடகங்களில் பரவலாகப் பகிரப்படும் வரைபடத்தில், திஸ்ஸ விகாரை பற்றிக் குறிப்பிடப்படடுள்ளது.

1978 முதல் 1996 வரையிலான காலப்பகுதியில் வெளியிடப்பட்ட 1:50,000 மெட்ரிக் அளவுத்திட்ட நிலப்படங்களில், திஸ்ஸ விகாரை அமைந்திருந்ததற்கான எந்தவொரு சான்றுகளும் இல்லை.



யாழ்ப்பாணம் –காங்கேசன்துறை
தையிட்டி திஸ்ஸ விகாரை:

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையாக வைத்தே 1980க்குப் பின்னரான செயற்கைக்கோள் (Satellite) அடிப்படையிலான '1:50,000 மெட்ரிக் வரைபடங்கள்' புதுப்பிக்கப்படுகின்றன," என்றார்.

நில அளவைத் திணைக்களப் பதிவுகள், தேசிய சுவடிகள் திணைக்கள வரைபடச் சான்றுகள் மற்றும் முன்னாள் பணிப்பாளர் நாயகத்தின் விளக்கங்கள் ஊடாக ஒரு வரலாற்று உண்மை உறுதியாகிறது: 1946 ஆம் ஆண்டிற்கு முன்னர் தையிட்டி பகுதியில் பௌத்த விகாரை எதுவுமே இருந்திருக்கவில்லை.

மேலும், தொல்பொருள் திணைக்களத்தின் மூலம் உத்தியோகபூர்வமாக குறித்த விகாரை நிலத்திலுள்ள பொருட்கள் தொல்பொருள் பெறுமதி வாய்ந்தவை என அறிவிக்கப்படவில்லை. பழங்கால விகாரையின் கற்களைக் கொண்டே காங்கேசன்துறை புகையிரத நிலையம் கட்டப்பட்டதாகக் கூறப்படும் கதைகள் அனைத்தும் ஆதாரமற்ற வாய்மொழிச் செய்திகளேயாகும். 1946க்குப் பின்னரான நூல்களிலேயே இது குறித்த முதற்கட்ட எழுத்துமூலக் குறிப்புகள் காணப்படுகின்றன.

1.25 ஏக்கர் நிலம் 15 ஏக்கராக உருமாறிய விசித்திரம்

1959 ஆம் ஆண்டின் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விகாரை குறியீடு, 1946க்குப் பின்னரான புதுப்பித்தலின் போது சேர்க்கப்பட்ட ஒன்றாகும். அக்காலத்தில் 1.25 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருந்த சிறிய விகாரையைக் குறிப்பதற்காகவே '1:63,360' வரைபடத்தில் ஒரு சிறிய குறியீடு பயன்படுத்தப்பட்டது. ஆனால், காலப்போக்கில் அந்த 1.25 ஏக்கர் விகாரை அழிந்துபோன நிலப்பரப்பைச் சுற்றியுள்ள ஒட்டுமொத்தப் பரப்பளவும் (சுமார் 14 ஏக்கர்) விகாரைக்குச் சொந்தமானது எனக் கூறி, போலியான முறையில் பொதுமக்களின் தனியார் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

இதற்குச் சான்றாக, நில அளவைத் திணைக்கள வரைபடத்தில் சிலுவைக் குறியீட்டின் மூலம் காட்டப்பட்டுள்ள ஒரு கத்தோலிக்க ஆலயத்தைக் குறிப்பிடலாம். வரைபடத்தில் குறியீடு பெரிதாகத் தெரிந்தாலும், நடைமுறையில் அது மிகச் சிறிய நிலப்பரப்பிலேயே அமைந்துள்ளது. மீள்குடியேற்றத்திற்குப் பின் குறித்த கத்தோலிக்க நிர்வாகத்தினர் வரைபடக் குறியீட்டைச் சுட்டிக்காட்டிச் சுற்றியுள்ள காணிகளுக்கு உரிமை கோரவில்லை.

கடந்த ஒன்றரை வருடங்களாகச் சேகரிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் வரலாற்றுச் சான்றுகளைத் தமிழ், சிங்கள இரு சமூகங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மூத்த வரலாற்று ஆசிரியரும் தொல்பொருள் நிபுணருமான ஒருவரிடம் (பெயரை வெளிப்படுத்த விரும்பவில்லை) சமர்ப்பித்து ஆலோசித்தோம். நமது தரவுகளைப் பரிசீலித்த அவர்:

"இந்தப் பிரச்சினை தொடங்கிய நாளிலேயே, இது தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணியில் கட்டப்பட்டுள்ள சட்டவிரோதமான பௌத்த விகாரை என்பது எனக்குத் தெரியும். ஆனால் இராணுவப் பலத்தையும் அரசியல் அதிகாரத்தையும் பயன்படுத்தி விகாரையைக் கட்டி முடித்துவிட்டார்கள். ஏற்கனவே கட்டப்பட்டுள்ள விகாரையை இடிப்பதால் தமிழ் - சிங்கள மக்களிடையே பேராபத்தான இன முரண்பாடுகள் வெடிக்கலாம். எனவே, காணி உரிமையாளர்களுக்கு அநீதி இழைக்கப்படாத வகையில் விகாரையைச் சுற்றியுள்ள ஏனைய மக்களின் காணிகள் அனைத்தும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். சட்டவிரோத விகாரைக் கட்டுமானத்தால் காணிகளை இழந்த மக்களுக்கு உரிய நஷ்டஈடு மற்றும் மாற்று நிலங்களை அரசாங்கம் வழங்க வேண்டும்," எனக் குறிப்பிட்டார்.


ANNEXURE B

1. Land Deed No. 7455 dated 16.5.1928 in the name of Mr. K. THAMBIAH.

Thaiyiddy Mudathy Kaladdy
14 1/2 LACHAMS
VALUE - RS.200/-
B2 H. 124/42 - 9 LACHCHAMS.
VALUE - RS.200/-

2. Land Deed No. 4118 dated 10.5.1936 in the name of Mr. K. THAMBIAH.

Registered No. H 173/40
Jaffna 15th May 1936.
Thaiyiddy Mudathy Kaladdy
9 LACHCHAMS.
VALUE RS. 180/-

3. Land Deed No. 4383 dated 4.8.1937 in the name of Mr. and Mrs. K. Thambiah.

Registered No. H 179/37
Jaffna 12th August, 1937.
Thaiyiddy Mudathy Kaladdy
14 1/2 LACHAMS
VALUE - RS.200/-

1928ஆம் ஆண்டு வரையிலான காணி உறுதிகள்





மகாவம்சத்தில் குறிப்பிடப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க திஸ்ஸ விகாரை அமையப்பெற்ற இடம் முற்றிலும் வேறொன்று என்றும், தற்போது தையிட்டியில் விகாரை எழுப்பப்பட்டுள்ள காணிகளில் எந்தவிதமான தொல்பொருள் அடையாளங்களும் இல்லை என்றும் அவர் அழுத்தமாகக் கூறினார்.

இதே கருத்தை நயினாதீவு நாகவிகாரையின் விகாராதிபதி வணக்கத்திற்குரிய நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸநாயக்க தேரரும் பகிரங்கமாகத் தனது சமூக ஊடகப் பக்கத்தில் பதிவு செய்திருந்தார்: "அப்பாவித் தமிழ் மக்களுக்குரிய காணிகளில் வெளி மாவட்டங்களில் இருந்து வந்த தேரர்கள் இராணுவத்தின் உதவியுடன் சட்டவிரோதமாக விகாரை அமைத்துள்ளனர். உண்மையான வரலாற்றுத் திஸ்ஸ விகாரைக்குரிய நிலம் வேறு இடத்தில் இருக்கையில், வேண்டுமென்றே மக்களின் காணிகள் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளன."

தற்போது பாதிக்கப்பட்ட நில உரிமையாளர்களின் ஒரே எதிர்பார்ப்பு, புதிய அரசாங்கம் தங்களுக்குரிய நீதியைப் பெற்றுத்தர வேண்டும் என்பது மட்டுமே. இது குறித்து தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரனிடம் கேட்டபோது, "இந்தப் பிரச்சினையில் நீதியமைச்சர் நேரடியாகத் தலையிட்டுள்ளார். சுயநல அரசியல் சக்திகள் சிலர் தமது தனிப்பட்ட அரசியலுக்காக இதனைப் பயன்படுத்த முயல்கின்றனர். புதிய அரசாங்கத்தின் மீது மக்களுக்கு இருக்கும் நம்பிக்கையை நாங்கள் நிச்சயமாகப் பாதுகாப்போம். குறுகிய காலத்திற்குள் மக்களுக்குரிய நியாயத்தைப் பெற்றுக்கொடுப்போம்," என உறுதியளித்தார்.

ஒரு சிறிய பௌத்த வழிபாட்டுத் தலத்தை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பிரச்சினை, இன்று நாட்டின் ஆழமான இனவாதப் பிளவுகளைப் பிரதிபலிக்கும் ஒரு களமாக மாறியுள்ளது. இது வெறும் 16 குடும்பங்களின் காணி உரிமை சார்ந்த பிரச்சினை மட்டுமல்ல மாறாக ஒரு சமூகத்தின் அடையாளம், வரலாறு மற்றும் பாரம்பரியத்தின் மீதான கேள்வியாகும்.

நில உரிமையை மறுப்பதன் மூலம் ஒரு சமூகத்தின் கூட்டு நினைவுகளை அழித்துவிட முடியும் எனச் சிலர் நினைக்கலாம். ஆனால் எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் உண்மை நிலைத்திருக்கும். நீதிக்காகக் குரலெழுப்பும் மக்களின் கேள்விகளுக்கு ஆட்சியாளர்கள் என்றாவது ஒரு நாள் பதிலளித்தே ஆக வேண்டும்.

தமிழ் மக்கள் போராட்ட வரலாற்றினை எழுதுவதில் யதார்த்தமும் – திரிபும்!

(தேசிய விடுதலைப் போராட்டங்களை அனுபவித்த மக்களுக்கு, வரலாறு என்பது கடந்த காலத்தை நினைவுகூரும் செயலாக மட்டுமல்ல எதிர்காலத்தை வடிவமைக்கும் அரசியல் ஆவணமாகவும் விளங்குகிறது. வரலாற்றுத் திரிப்புகளைக் கடந்து நினைவக அரசியல் மற்றும் உண்மையைப் பாதுகாக்கும் காலத்தின் கட்டாயமாகும்.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வரலாறு அரசியல் வசதிகளின் அடிப்படையில் அல்ல, வரலாற்றியல் நெறிமுறைகளின் அடிப்படையில் எழுதப்பட வேண்டும். உண்மைகளை ஆதாரங்களுடன் பதிவு செய்வதும், வேறுபட்ட பார்வைகளை விமர்சன ரீதியில் ஆய்வு செய்வதும், நினைவகத்தைப் பாதுகாப்பதும் இன்றைய காலத்தின் முக்கியமான அறிவுசார் பொறுப்பாகும்)

- நவீனன் -

ஒரு இனத்தின் வரலாறு என்பது வெறும் கடந்தகால நிகழ்வுகளின் தொகுப்பு மட்டுமல்ல. அது அந்த இனத்தின் அரசியல் நினைவகம், பண்பாட்டு அடையாளம், எதிர்கால அரசியல் பயணம் மற்றும் கூட்டு மனச்சாட்சியின் பதிவாகும். குறிப்பாக தேசிய விடுதலைப் போராட்டங்களை அனுபவித்த மக்களுக்கு, வரலாறு என்பது கடந்த காலத்தை நினைவுகூரும் செயலாக மட்டுமல்ல எதிர்காலத்தை வடிவமைக்கும் அரசியல் ஆவணமாகவும் விளங்குகிறது.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டமும் இதற்கு விதிவிலக்கல்ல. பல தசாப்தங்களாக நீடித்த இந்தப் போராட்டம் ஆயிரக்கணக்கான உயிரிழப்புகளையும், இடம்பெயர்வுகளையும், மனித உரிமை மீறல்களையும், ஆழமான சமூக மாற்றங்களையும் உருவாக்கியது. இதன் அரசியல், சமூக, இராணுவ, கலாசார மற்றும் சர்வதேச பரிமாணங்கள் மிகவும் சிக்கலானவை. இத்தகைய வரலாற்றைப் பதிவு செய்வது மிகுந்த பொறுப்புணர்வும் ஆதாரபூர்வமான ஆய்வும் வேண்டிய பணியாகும்.

ஆனால் அண்மைக் காலங்களில், தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றை பல்வேறு கோணங்களில் மறுபரிசீலனை செய்யும் முயற்சிகளுடன், சில நேரங்களில் வரலாற்றைத் திரித்து விளக்கும் முயற்சிகளும் அதிகரித்துள்ளன. சமூக ஊடகங்கள், காணொளித் தளங்கள், தனிப்பட்ட நினைவுக் குறிப்புகள், அரசியல் கட்டுரைகள் மற்றும் கருத்துப் பதிவுகள் வழியாக பல்வேறு விளக்கங்கள் முன்வைக்கப்படுகின்றன. இவை அனைத்தும் ஒரே தரமான ஆதாரங்களின் அடிப்படையில் அமைகின்றன என்று கூற முடியாது.

வரலாற்றியல் ஆய்வில், ஒரே நிகழ்வை பல்வேறு கோணங்களில் அணுகுவது இயல்பானது. ஆனால் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள், தனிப்பட்ட விருப்ப வெறுப்புகளின் அடிப்படையில் உருவாக்கப்படும் கதைகள் அல்லது அரசியல் நோக்கங்களுக்காக மாற்றப்படும் நினைவுகள் வரலாற்றின் இடத்தைப் பிடிக்கத் தொடங்கும்போது, அது வரலாற்று நினைவகத்திற்கே சவாலாக மாறுகிறது.

தேசிய விடுதலைப் போராட்டங்கள் முடிவடைந்த பின்னர் அவற்றின் வரலாறு மீண்டும் எழுதப்படுவது உலகின் பல பகுதிகளிலும் நடந்துள்ளது. ஆபிரிக்கா, ஆசியா, லத்தீன் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் பல நாடுகளில் விடுதலைப் போராட்டங்களைப் பற்றிய புதிய ஆய்வுகள் தொடர்ந்து வெளிவருகின்றன. சில ஆய்வுகள் புதிய ஆவணங்களை வெளிக்கொணர்கின்றன. சில ஆய்வுகள் முன்னர் புறக்கணிக்கப்பட்ட சமூகங்களின் அனுபவங்களை பதிவு செய்கின்றன. இவை வரலாற்றைப் புரிந்துகொள்ள உதவுகின்றன.

அதே நேரத்தில், அரசியல் மாற்றங்களின் பின்னணியில் வரலாற்றை மாற்றியமைக்கும் முயற்சிகளும் உலகளவில் நிகழ்ந்துள்ளன. ஆட்சிமாற்றங்கள், அரசியல் கூட்டணிகள், சர்வதேச உறவுகள் மற்றும் தேசிய அடையாள அரசியல் ஆகியவை பல சமயங்களில் வரலாற்று விளக்கங்களையும் பாதித்துள்ளன. எனவே, எந்த வரலாற்றுப் பதிவையும் அதன் ஆதாரங்கள், ஆய்வுமுறை மற்றும் சான்றுகளின் அடிப்படையில் விமர்சனமாக அணுகுவது அவசியம்.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் இதே அணுகுமுறையில்தான் ஆய்வு செய்ய வேண்டும். போராட்டத்தின் பல்வேறு கட்டங்கள், அரசியல் இயக்கங்கள், ஆயுத இயக்கங்கள், மக்கள் இயக்கங்கள், பெண்களின் பங்களிப்பு, மாணவர் இயக்கங்கள், ஊடகங்கள், புலம்பெயர் தமிழர்களின் பங்கு, சர்வதேச அரசியல் மற்றும் மனிதாபிமான விளைவுகள் ஆகிய அனைத்தும் விரிவாக ஆய்வு செய்யப்பட வேண்டும். எந்த ஒரு தரப்பினதும் குரல் மட்டுமே முழுமையான வரலாறாகக் கருதப்பட முடியாது.

வரலாற்றை எழுதும்போது ஆவணங்கள், நீதிமன்றப் பதிவுகள், சர்வதேச அமைப்புகளின் அறிக்கைகள், அரசுத் தகவல்கள், தனிநபர் சாட்சியங்கள், பத்திரிகை ஆவணங்கள், கல்வியியல் ஆய்வுகள் மற்றும் பல்வேறு தரப்பினரின் நினைவுப் பதிவுகள் ஆகியவை ஒப்பீட்டு முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். ஒரு ஆதாரத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு முழு வரலாற்றையும் கட்டமைப்பது தவறான முடிவுகளுக்கு வழிவகுக்கும்.

டிஜிட்டல் தகவல் பரவல்

இன்றைய டிஜிட்டல் காலத்தில் தகவல் பரவல் மிக வேகமாக நடைபெறுகிறது. சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் ஒரு பதிவு சில மணி நேரங்களில் ஆயிரக்கணக்கான மக்களைச் சென்றடைகிறது. ஆனால் அந்தப் பதிவுகள் அனைத்தும் வரலாற்று ஆதாரங்களாக ஏற்றுக்கொள்ளப்பட முடியாது. உண்மைச் சரிபார்ப்பு, ஆதார மதிப்பீடு மற்றும் அறிவியல் ஆய்வுமுறை ஆகியவை இல்லாமல் வெளியிடப்படும் தகவல்கள், பொதுமக்களின் வரலாற்றுப் புரிதலை பாதிக்கும் அபாயம் உள்ளது.

அதேபோல், எந்தப் போராட்டத்திலும் மனிதர்கள் பல்வேறு முடிவுகளை எடுத்திருக்கலாம் சில முடிவுகள் பின்னாளில் விமர்சிக்கப்படலாம் சில நடவடிக்கைகள் புதிய ஆதாரங்களின் அடிப்படையில் மறுபரிசீலனை செய்யப்படலாம். ஆனால் இத்தகைய விவாதங்கள் ஆவணங்கள், ஆதாரங்கள் மற்றும் கல்வியியல் நேர்மையின் அடிப்படையில் நடைபெற வேண்டும். தனிநபர்களை இழிவுபடுத்தும் மொழி அல்லது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் வரலாற்று ஆய்வுக்கு உதவாது.

ஒரு இனத்தின் வரலாற்று நினைவகம் பாதுகாக்கப்பட வேண்டுமெனில் ஆவணப்படுத்தும் பணிக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். போராட்டத்தில் பங்கேற்றவர்களின் வாய்மொழிச் சாட்சியங்கள், கடிதங்கள், நாள்குறிப்புகள், புகைப்படங்கள், காணொளிகள், செய்தித்தாள்கள், அரசியல் அறிக்கைகள் மற்றும் சர்வதேச ஆவணங்கள் ஆகியவை முறையாக சேகரிக்கப்பட்டு காப்பகப்படுத்தப்பட வேண்டும். எதிர்கால ஆய்வாளர்களுக்கு அவை முக்கியமான ஆதாரங்களாக அமையும்.

தமிழ்த் தேசிய வரலாற்றை எழுதல்

தமிழ்த் தேசிய வரலாற்றை எழுதுவது ஒரே தலைமுறையின் பொறுப்பு அல்ல. கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், சமூக ஆய்வாளர்கள், மனித உரிமை ஆராய்ச்சியாளர்கள், ஆவணக் காப்பக நிபுணர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் இதில் பங்காற்ற வேண்டியுள்ளது. கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், ஆதாரங்களின் அடிப்படையில் உரையாடும் பண்பாடு வளர்க்கப்பட வேண்டும்.

வரலாற்று உண்மையைப் பாதுகாப்பது என்பது யாரையும் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்களாகக் கருதுவதாக அல்ல. மாறாக, வரலாற்றின் அனைத்து பரிமாணங்களையும் நியாயமான முறையில் ஆராய்ந்து, பல்வேறு குரல்களையும் பதிவுசெய்து, ஆதாரங்களின் வெளிச்சத்தில் சமநிலையான புரிதலை உருவாக்குவதாகும். அதுவே எதிர்காலத் தலைமுறைகளுக்கு பயனுள்ள வரலாற்று மரபாக அமையும்.

எனவே, தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வரலாறு அரசியல் வசதிகளின் அடிப்படையில் அல்ல, வரலாற்றியல் நெறிமுறைகளின் அடிப்படையில் எழுதப்பட வேண்டும். உண்மைகளை ஆதாரங்களுடன் பதிவு செய்வதும், வேறுபட்ட பார்வைகளை விமர்சன ரீதியில் ஆய்வு செய்வதும், நினைவகத்தைப் பாதுகாப்பதும் இன்றைய காலத்தின் முக்கியமான அறிவுசார் பொறுப்பாகும்.

ஒரு இனத்தின் எதிர்காலம் அதன் வரலாற்று நினைவகத்தின் தரத்துடன் தொடர்புடையது. உண்மையைத் தேடும் பணியைத் தொடர்ந்து முன்னெடுத்து, ஆதாரபூர்வமான வரலாற்றை உருவாக்குவது வரலாற்றாசிரியர்களின் கடமையாக மட்டுமல்ல் சமூகத்தின் ஒட்டுமொத்த பொறுப்பாகவும் உள்ளது. வரலாறு அரசியல் போட்டிகளின் கருவியாக அல்ல, உண்மையைத் தேடும் அறிவியல் முயற்சியாக நிலைநிறுத்தப்படும்போது மட்டுமே, அது வருங்கால தலைமுறைகளுக்கு நம்பகமான வழிகாட்டியாக இருக்கும்.

XD
XDream Jewellery
Manufacturers & Importers of Modern Styles in 22K (916) Solid Gold
Where Tradition Meets Timeless Luxury
Discover gold jewellery, designed to sparkle for generations.
22K & 24K Pure Gold – Exquisite Designs, Unmatched Craftsmanship
Cash When You Need It
Trust You Can Count On
Bring your gold Top Dollar Paid
Safe & Secure • Same-Day Service
02 8677 4490
xdreamjewellery.com.au
08xdream@gmail.com
8 Aurelia St,
Toongabbie NSW 2146

You Deserve Translation Services

Rachel Payne, MP, Member for the South-eastern Metropolitan Region (Victoria)

My name is Rachel Payne, and I am the Victorian Member for South-Eastern Metropolitan Region. With the State Election coming up in November, I have been reflecting on how MPs communicate with the communities they serve. I firmly believe that all MPs should have translation services available on their websites and yet, very few do. Failure to provide these services undermines a fundamental tenant of a multicultural democracy – access to information.

When I set up my office, I made sure that all the material on my website is translatable into a range of languages, including Arabic, Chinese, Filipino, French, German, Greek, Hebrew, Hindi, Indonesian, Italian, Korean, Nepali, Portuguese, Punjabi, Russian, Spanish, Sudanese, Thai and Vietnamese. Every single bit of information on my website is available to anyone who speaks any of these languages. There is also an accessibility function for people with disabilities.

I was recently speaking to a member of my community who drew my attention to the fact that other MPs do not have these services. Once I looked into it, I was shocked to discover that I could not find any other MPs who offer translation services for all materials on their website. Some MPs do have translation services on their websites, but only for the pages that tell you how to vote for them! The irony is the very same politicians asking for your vote – and making laws that affect how you live – are not offering you a way to read their policies. In other words, they have taken the time to translate how to get your vote, but not to tell you what they stand for.

Translation services for websites are affordable and cost as little as $500 - a small price to pay to ensure communities have equal access to information. Victorians whose first language is not English are equal citizens. We live in a vibrant and proud multicultural society in which everyone deserves to fully participate in the democratic process. Having translation services helps people with limited English fully understand and engage with the laws, rights and government services that affect their daily life. It helps them vote.

Translation services enhance community engagement. As a member of Parliament, it is my responsibility to know and understand my community and to hear what they want for the South-East. The best ideas I have ever had in my time in parliament have come from the people I serve. We must be able to understand each other to really build community.

Translation is also a safety issue. As an MP, I work on many issues that directly impact on the safety and wellbeing of the community. One example that I am passionate about is Family Violence. Family Violence affects all communities – all races, religions, socio-economic backgrounds, sexualities – and it is the leading contributor of ill-health and premature death for women in Victoria under the age of 45. If information about family violence is not provided across a range of languages it leaves women whose first language is not English, even more at risk. This also applies to emergency services and other essential services. It is simply not good enough if we are not making emergency information accessible for everyone.

Finally, translation services are about inclusion. Not just talking about inclusion, but actually doing something about it. How can I possibly ask you to trust me – let alone vote for me – if you can't even read my website. I would encourage those of you reading this article to ask your local member of parliament if their website is translatable into languages other than English and if not, why not.

And for those who are interested, you can access mine here: https://rachelpayne.com.au/.

Whether you vote for me or someone else in November, you should have the same access to information as any other Victorian.

And while I am here, you will notice that I represent the Legalise Cannabis Party of Victoria. We are a smaller political party advocating for sensible law reform around cannabis. Access to medicinal cannabis (with a script from a doctor) is now legal in Australia, but outside of that cannabis remains illegal in Victoria, despite all the evidence that prohibition is a failed and harmful policy. While I know cannabis is also illegal in many of your countries of birth, I also note the deep cultural, historical and spiritual ties that many of you have to this plant. I will continue to fight for sensible, adult access to cannabis and, to advocate on all the other issues that matter to my constituents.

FAIR, COMMON SENSE POLITICS.
LEADING WITH COMPASSION.

RACHEL PAYNE MP
Member for South-Eastern Metropolitan Region
LEGALISE CANNABIS VICTORIA

(03) 9651 8972
rachelpayne.com.au
rachel.payne.mp@parliament.vic.gov.au

ஆஸ்திரேலியாவின் பிரமாண்ட கலைத் திட்டம்: நவம்பர் 7-இல் திறப்பு

மேற்கு சிட்னியின் முதல் மாநில கலாசார நிறுவனமான 'பவர்ஹவுஸ் பரமட்டா' (Powerhouse Parramatta) எதிர்வரும் நவம்பர் 7-ஆம் திகதி அதிகாரபூர்வமாக பொதுமக்களுக்காகத் திறக்கப்படவுள்ளது.

915 மில்லியன் டொலர் செலவில் பிரமாண்டமாக உருவாக்கப்பட்டுள்ள இந்த அருங்காட்சியகத்தின் கட்டுமானப் பணிகள் 4 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த மே மாதம் நிறைவடைந்தன.

இந்த அருங்காட்சியகத்தில் 7 பரந்த மண்டலங்கள் (zones) அமைக்கப்பட்டுள்ளன. இதில் 18 மீட்டர் உயரமும், 2,200 சதுர மீட்டருக்கும் அதிகமான பரப்பளவும் கொண்ட ஒரு பிரமாண்ட பகுதியில், விண்வெளி ஆராய்ச்சி குறித்த ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய கண்காட்சியான 'டாஸ்க் எடர்னல்' (Task Eternal) நடைபெறவுள்ளது.

சிட்னி ஒபரா ஹவுஸுக்குப் பிறகு மிகப்பெரிய திட்டம்

இது குறித்து நியூ சவுத் வேல்ஸ் (NSW) கலைத்துறை அமைச்சர் ஜான் கிரஹாம் கூறுகையில்,

"சிட்னி ஒபரா ஹவுஸ் கட்டப்பட்டதற்குப் பிறகு நியூ சவுத் வேல்ஸில் மேற்கொள்ளப்பட்ட மிக முக்கியமான கலாசார உட்கட்டமைப்புத் திட்டம் இதுவாகும்.

தற்போதைய வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள சூழலில், பொதுமக்கள் அனைவரும் இந்த பிரமாண்ட கட்டடத்தை இலவசமாக வந்து பார்வையிடலாம் என்பதே இதன் மிகச் சிறந்த செய்தி" என்று தெரிவித்தார்.

சிறப்பம்சங்கள்

முதல் கட்டமாக நடைபெறவுள்ள 5 கண்காட்சிகளில் 3,000-க்கும் மேற்பட்ட பொருட்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

வரலாற்றுச் சிறப்புமிக்க 'குவாண்டாஸ் அவ்ரோ 504கே' (Qantas Avro 504k) விமானம் இங்கு முக்கியமான ஈர்ப்பாக இடம் பெறும்.

ஷாப்பிங் மால்களின் வரலாறு மற்றும் பண்பாட்டு முக்கியத்துவத்தை விளக்கும் 'தி மால்' (The Mall) என்ற மற்றொரு பிரத்யேகக் கண்காட்சியும் இடம்பெறவுள்ளது.

12,000 'பாலியல் தொல்லை' அழைப்புகள்: இளைஞன் கைது

ஆஸ்திரேலியா முழுவதும் உள்ள பெண்களை இலக்கு வைத்து, அவர்களுக்குச் பாலியல் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் 12,000-க்கும் மேற்பட்ட தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்ட 27 வயதான நபரை Northern Territory காவல்துறையினர் கைது செய்து வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

காவல்துறை வெளியிட்ட அறிக்கையின்படி, இந்த அத்துமீறல் சம்பவம் நடப்பு ஆண்டின் ஜூன் 19 அன்று தொடங்கினாலும், ஒரு மாதத்திற்குப் பிறகே காவல் துறைக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட தொலைபேசி எண் ஆலிஸ் ஸ்பிரிங்ஸ் (Alice Springs) பகுதியில் இருப்பதை அடையாளம் கண்ட பிறகு, ஜூலை 29 அன்று காவல் துறையிடம் முறைப்பாடு



செய்யப்பட்டுள்ளது.

அந்தத் தொலைபேசி எண்ணிற்குப் பின்னால் இருந்த ஆலிஸ் ஸ்பிரிங்ஸைச் சேர்ந்த நபரைக் காவல்துறையினர் நேற்று அடையாளம் கண்டு கைது செய்தனர். மேலும் அவரிடமிருந்த கைபேசியையும் பறிமுதல் செய்தனர்.

தகவல்தொடர்பு சேவையைப் பயன்படுத்தித் தொல்லை தருதல், அச்சுறுத்துதல் அல்லது குற்றச்செயலில் ஈடுபடுதல் ஆகிய ஐந்து கொமன்வெல்த் சட்டப் பிரிவுகளின் கீழ் அந்த நபர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட வேறு ஏதேனும் பெண்கள் இருந்தால் தைரியமாக முன்வந்து புகார் அளிக்குமாறு வடக்கு பிராந்திய காவல்துறையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

"இந்தச் சம்பவத்தில் மேலும் பல பெண்கள் பாதிக்கப் பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது" என்றும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

குடியேறிகளுக்கும் தடை; புர்கா, நிகாப்புக்கும் தடை!!

வன் நேசன் கட்சி சூளுரைப்பு

“ எங்கள் ஆட்சியில் தீவிரவாதப் பின்னணி கொண்ட நாடுகளிலிருந்து வரும் குடியேற்றங்களைத் தடை செய்வேன். புர்கா, நிகாப் போன்ற ஆடைகளைத் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.” என்று ஆஸ்திரேலிய வன் நேசன் கட்சியின் தலைவர் பாலின் ஹேன்சன் (Pauline Hanson சூளுரைத்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் ‘வன் நேஷன்’ (One Nation) கட்சியின் செல்வாக்கு மக்கள் மத்தியில் தொடர்ந்து அதிகரித்து வருவதாக அண்மைக்காலக் கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன.

“ஆஸ்திரேலியர்களுக்கு முதலிடம்”, கடுமையான குடியேற்றக் கொள்கை போன்ற தீவிர வலதுசாரி நிலைப்பாடுகளைக் கொண்டுள்ள அக்கட்சி, வரவிருக்கும் விக்டோரிய மாநிலத் தேர்தலில் பெரும் ஆதிக்கம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், ‘வன் நேஷன்’ கட்சியின் தேசியத் தலைவர் பாலின் ஹேன்சன் (Pauline Hanson) மற்றும் விக்டோரிய மாநிலத் தலைவர் வாரன் பிக்கரிங் (Warren Pickering) ஆகியோர் இணைந்து 3AW வானொலிக்கு வழங்கிய நேர்காணலின் சில பகுதிகள் வருமாறு:

டாம் (தொகுப்பாளர்): நீங்கள் சமீப காலம் வரை ஆஸ்திரேலிய பாதுகாப்புப் படையில் (ADF) பணியாற்றியவர் அல்லவா?

வாரன் பிக்கரிங்: ஆம், முழுநேரச் சேவை மற்றும் இருப்புப் படைச் சேவை (Standby Reserve) என மொத்தம் 10 ஆண்டுகள் பணியாற்றியுள்ளேன்.

டாம்: உங்களுக்கு அரசியலுக்கு வர வேண்டும் என்ற எண்ணம் ஏன் வந்தது?

வாரன் பிக்கரிங்: ஒரு தனிப் பெற்றோராக (Sole Parent) எனது மகளை வளர்த்தபோது, 20 ஆண்டுகளுக்கு முன்பு 22 வயதில் எனக்குக் கிடைத்த பொருளாதார வாய்ப்புகளும் சுதந்திரமும் இன்று 22 வயதாகும் என் மகளுக்குக் கிடைக்கவில்லை என்பதை உணர்ந்தேன்.

தொழிற்பயிற்சி பெறுவதோ, பல்கலைக்கழகத்திற்குச் செல்வதோ அன்று பெரிய செலவாக இருக்கவில்லை. ஆனால், இன்று ஒரு இளைஞரால் தனியாக வீடு எடுத்துத் தங்குவது கூட முடியாத காரியமாகிவிட்டது.

டாம்: விக்டோரியாவின் பொருளாதார வீழ்ச்சியை எவ்வாறு சரிசெய்யப் போகிறீர்கள்?

வாரன் பிக்கரிங்: விக்டோரியா மாநிலம் சமூக-பொருளாதார வீழ்ச்சியின் விளிம்பில் நிற்கிறது. 2023-24 நிதியாண்டில் மட்டும் 1,30,000 வணிகங்கள் மூடப்பட்டுள்ளன அல்லது வேறு மாநிலங்களுக்குச் சென்றுவிட்டன.

63 புதிய வரிகள் விதிக்கப்பட்டு சிறு வணிகங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. வரிகளைக் குறைத்து, வணிகங்களுக்கான பணப்புழக்கத்தை அதிகரிப்பதன் மூலம் விக்டோரியாவை மீண்டும் சிறந்த முதலீட்டு இடமாக மாற்றுவோம்.

டாம்: விக்டோரியத் தேர்தலில் எத்தனை தொகுதிகளில் போட்டியிடுகிறீர்கள்? வேட்பாளர்களை எவ்வாறு தேர்வு செய்கிறீர்கள்?

பாலின் ஹேன்சன்: கீழ் அவையில் 88 தொகுதிகளிலும் மேல் அவையிலும் வேட்பாளர்களை நிறுத்துகிறோம். மாநிலத் தேர்தலுக்கு 1,200 பேரும், கூட்டாட்சித் தேர்தலுக்கு (Federal Election) 1,500 பேரும் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

எங்களிடம் உள்ள புதிய தொழில்நுட்ப அமைப்பின் மூலம், விண்ணப்பதாரர்களின் சமூக வலைத்தளப் பதிவுகள், சர்வதேசக் கருத்துகள், வரி நிலுவைகள், வங்கித் திவால்நிலைகள் மற்றும் குற்றப் பின்னணிகள் வரை துல்லியமாக ஆய்வு (Vetting) செய்தே வேட்பாளர்களைத் தேர்வு செய்கிறோம்.

டாம்: குற்றங்கள் மற்றும் பிணை வழங்குதல் தொடர்பாக உங்கள் திட்டம் என்ன?

வாரன் பிக்கரிங்: மீண்டும் மீண்டும் குற்றம் சாட்டப்படுபவர்களுக்கு எளிதில் பிணை (Bail) கிடைக்கும் முறையை முடிவுக்குக் கொண்டு வருவோம். கூடுதல் காவலர்களை நியமிப்போம்.

பாலின் ஹேன்சன்: நீதிபதிகள் குற்றவாளிகளுக்குத் தகுந்த தண்டனை வழங்குவதை உறுதிசெய்ய சட்டப்பூர்வ ‘கட்டாயத் தண்டனைகளை’ (Mandatory sentences) உருவாக்குவோம். பொதுமக்களின் எதிர்பார்ப்பிற்கு மாறாகச் செயற்படும் நீதிபதிகளை விசாரணை செய்யச் சுயாதீன வாரியம் அமைக்கப்படும்.

டாம்: எதிர்க்கட்சியான லிபரல் கட்சியுடன் இணைந்து செயற்படத் தயாரா?

பாலின் ஹேன்சன்: லிபரல் கட்சியினர் தங்களின் அகந்தையைக் கைவிட வேண்டும். தொழிற்கட்சி - கிரீன்ஸ் கூட்டணியின் நச்சுத்தன்மை வாய்ந்த ஆட்சியை அகற்ற எங்களோடு இணைந்து பணியாற்ற வேண்டும். நாங்கள் அமைச்சுப் பதவிகளை எதிர்பார்க்கவில்லை தகுதியும் திறமையும் உள்ளவர்களுக்கே முன்னுரிமை அளிப்போம். தொழிற்கட்சியைப் போல தகுதியற்ற பெண்களுக்கு ‘அடையாளப் பிரதிநிதித்துவத்திற்காக’ (Tokenism) பதவிகளைத் தருவதில் எனக்கு உடன்பாடில்லை.

டாம்: ABC, The Age, The Guardian போன்ற ஊடகங்களுக்குத் தடை விதித்தது ஏன்?

பாலின் ஹேன்சன்: எங்கள் கருத்துகளைத் திரித்து வெளியிடும், இடதுசாரிச் சார்புடைய ஊடகங்களுக்கு அனுமதி அளிக்க வேண்டிய அவசியமில்லை. எங்களுக்கு நேர்மையான செய்தி அறிக்கையிடல் (Fair reporting) மட்டுமே தேவை.

டாம்: பழங்குடியின ஒப்பந்தம் (Treaty) குறித்த நிலைப்பாடு என்ன?

வாரன் பிக்கரிங்: ஆட்சிக்கு வந்த முதல் நாளிலேயே ‘முதல் தேசங்கள் பேரவையை’ (First Nations Assembly) கலைப்போம். இது இனரீதியாக மக்களைப் பிரிப்பதுடன், ஆண்டுக்கு 70 முதல் 100 மில்லியன் டொலர் வரை வீண் செலவையும் ஏற்படுத்துகிறது.

டாம்: முஸ்லிம் குடியேற்றம் (Muslim Immigration) குறித்து தங்கள் கட்சி என்ன கருதுகிறது?

பாலின் ஹேன்சன்: தீவிரவாத பின்னணி கொண்ட நாடுகளிலிருந்து வரும் குடியேற்றங்களைத் தடை செய்வேன். புர்கா, நிகாப் போன்ற ஆடைகளைத் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஷரியா சட்டம் மற்றும் பலதார மணங்கள் மூலம் நலத்திட்ட உதவிகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்போம். ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைப் பாடமாகக் கொண்டு, ஆஸ்திரேலியாவில் இதற்கெதிராகத் தீவிரமாகப் போராடுவேன்.

மாத ராசிபலன்

மேடம்

மேஷ ராசியினருக்கு ஆற்றலும் உற்சாகமும் நிறைந்த மாதமாக இருக்கும். செவ்வாயின் சாதகமான சஞ்சாரத்தால் தொட்ட காரியங்கள் அனைத்திலும் வெற்றி காண்பீர்கள். நிலுவையில் இருந்த வேலைகளைச் சுறுசுறுப்பாக முடித்துக் காட்டுவீர்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் அமைதியும் நிலவும். கணவன்-மனைவி இடையே புரிந்துணர்வு அதிகரிக்கும். ஆரோக்கியத்தைப் பொறுத்த வரை சிறுசிறு உடல் உபாதைகள் வந்து நீங்கும். உணவுப் பழக்கத்தில் கவனம் செலுத்துவது நல்லது, அதிர்ஷ்ட எண்: 9, அதிர்ஷ்ட நிறம்:சிவப்பு.

இடபம்

ரிஷப ராசியினருக்கு இந்த மாதம் பொறுமையையும் நிதானத்தையும் கடைப்பிடிக்க வேண்டிய மாதமாகும். சுக்கிரனின் நகர்வுகள் உங்கள் ராசிக்குச் சாதகமாக இருப்பதால் கலை மற்றும் படைப்புத் துறையில் உள்ளவர்களுக்கு அபாரமான வளர்ச்சி காத்திருக்கிறது.

உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு சற்று அதிகமாகவே இருக்கும். தொழிலில் புதிய முதலீடுகளை ஒத்திவைப்பது நல்லது. குடும்பத்தில் சிறுசிறு மனஸ்தாபங்கள் வரக்கூடும் என்பதால் விட்டுக் கொடுத்துப் போவது அமைதியைத் தரும். சுபகாரியங்கள் சற்று தாமதத்துக்குப் பிறகே கைகூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

மிதுனம்

மிதுன ராசியினருக்கு புத்தி கூர்மையும், சாதனை படைக்கும் வாய்ப்புகளும் நிறைந்து காணப்படும். புதனின் சாதகமான பார்வையால் உங்கள் தொடர்பாடல் திறன் அதிகரிக்கும். எடுத்த காரியங்களைச் சுலபமாக முடித்துக் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் ஆலோசனைகள் உயர் அதிகாரிகளால் பாராட்டப்படும். புதிய வேலை தேடுபவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். வெளிநாட்டுத் தொடர்புகள் மூலம் நல்ல லாபம் கிடைக்கும். ஏற்றுமதி-இறக்குமதி வியாபாரம் செழித்தோங்கும். குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக இருக்கும். சகோதர, சகோதரிகளிடையே பிணைப்பு வலுப்படும்.

கடகம்

கடக ராசியினருக்கு இந்த மாதம் மன அமைதியும், குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிறைந்ததாக இருக்கும். சந்திரனின் ஆதிக்கம் நிறைந்த உங்கள் ராசிக்கு ஓகஸ்ட் மாதம் சுப பலன்களை அதிகமாக அள்ளிக் கொடுக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சாதகமான மாற்றங்கள் ஏற்படும். விரும்பிய இடமாற்றம் அல்லது பதவி உயர்வு கிடைக்க வாய்ப்புள்ளது. சக ஊழியர்கள் உங்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவார்கள். தொழிலில் எதிர்பார்த்ததை விட நல்ல லாபம் கிடைக்கும். வீட்டில் சுபகாரிய நிகழ்ச்சிகள் திட்டமிட்டபடி நடைபெறும். ஆரோக்கியத்தில் பெரிய அளவில் பாதிப்புகள் எதுவும் இருக்காது. அதிர்ஷ்ட எண்: 2 , அதிர்ஷ்ட நிறம்: பால் வெள்ளை.

சிம்மம்

சிம்ம ராசியினருக்கு தன்னம்பிக்கையும், அதிகாரமும் அதிகரிக்கும் காலமாகும். சூரியனின் ஆட்சி பலத்தால் உங்கள் ஆளுமைத் திறன் மிளிரும். சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் உயரும். உத்தியோகத்தர்கள் தங்களின் கடின உழைப்பால் நிர்வாகத்தின் பாராட்டைப் பெறுவார்கள். அதிகாரமிக்க புதிய பொறுப்புகள் உங்களைத் தேடி வரும். குடும்பத்தில் மூத்தவர்களின் ஆசியும் வழிகாட்டுதலும் கிடைக்கும். கணவன்-மனைவி இடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் சிறப்பான செயல்பாடுகள் பெருமை சேர்க்கும்.

கன்னி

கன்னி ராசியினர் திட்டமிட்டுச் செயற்படுவதன் மூலம் பெரும் வெற்றிகளைப் பெறக்கூடிய மாதமாகும். காரியங்களில் தடைகள் வந்தாலும் உங்களின் புத்திசாலித்தன புதிய கடன்களை வாங்கி தொழிலை விரிவுபடுத்துவதைத் தவிர்க்கவும். குடும்பத்தில் அவ்வப்போது கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. நிதிநிலையில் வரவும் செலவும் சமமாக இருக்கும். எதிர்பாராத சுபச் செலவுகள் ஏற்படக்கூடும் என்பதால் சேமிப்பு அவசியம். ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் தேவை. அதிர்ஷ்ட எண்: 5 ,அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை.

துலாம்

துலா ராசியினருக்கு இந்த மாதம் மகிழ்ச்சியும், திருப்தியும் நிறைந்த சுப மாதமாக அமையும். சுக்கிரனின் யோக பார்வையால் பல வழிகளில் இருந்தும் நன்மைகள் உங்களைத் தேடி வரும்.

உத்தியோகத்தில் உங்களின் வேலைத் திறன் பாராட்டுப்பெறும். எதிர்பார்த்த இடமாற்றம் அல்லது பதவி உயர்வு கைகூடும். கூட்டு வியாபாரம் செய்பவர்களுக்குக் கூட்டாளிகளால் அதிக லாபம் கிடைக்கும். குடும்ப வாழ்க்கை மிகவும் இனிமையாக இருக்கும். பிரிந்திருந்த தம்பதியினர் மீண்டும் ஒன்று சேர்வார்கள். சுபகாரிய முயற்சிகள் தடைகளின்றி நடக்கும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

விருச்சிகம்

விருச்சிக ராசியினருக்கு சவால்களை எதிர்கொண்டு வெற்றிபெறும் மாதமாக இருக்கும். செவ்வாயின் ஆதிக்கத்தால் தைரியமும் துணிச்சலும் அதிகரிக்கும். இருப்பினும், கோபத்தைக் குறைத்து நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகமாக இருக்கும். சிலருக்கு தேவையில்லாத அலைச்சல்களும் வேலை மாற்றங்களும் ஏற்படலாம். ஆனால் இறுதி வெற்றி உங்களதாகவே இருக்கும். தொழிலில் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். குடும்பத்தில் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. வாழ்க்கைத்துணையின் ஆதரவு உங்களுக்கு ஆறுதலாக இருக்கும்.

தனுசு

தனுசு ராசியினருக்கு பாக்கியங்களும் யோகங்களும் நிறைந்த மாதமாகும். குருவின் அருள் பார்வையால் நினைத்த காரியங்கள் அனைத்தும் தடைகளின்றி நிறைவேறும்.

உத்தியோகத்தில் சிறப்பான வளர்ச்சி காணப்படும். உத்தியோக உயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்க பிரகாசமான வாய்ப்புள்ளது. குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிம்மதியும் அதிகரிக்கும். ஆன்மீகப் பயணங்கள் செல்லத் திட்டமிடுவீர்கள். சுப நிகழ்ச்சிகள் தடையின்றி சிறப்பாக நடக்கும். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவார்கள். ஆசிரியர் மற்றும் பெற்றோரின் பாராட்டைப் பெறுவார்கள். அதிர்ஷ்ட எண்: 3 ,அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள்.

மகரம்

மகர ராசியினருக்கு ஓகஸ்ட் மாதம் கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் செயற்பட வேண்டிய மாதமாகும். சனியின் தாக்கத்தால் காரியங்களில் தாமதங்களும் அலைச்சல்களும் ஏற்படக்கூடும். பொறுமை மிக அவசியம். உத்தியோகத்தில் அதிக கவனம் தேவை. வேலையைத் தள்ளிப்போடாமல் உடனுக்குடன் முடிப்பது நல்லது. மேலதிகாரிகளுடன் தேவையற்ற விவாதங்களைத் தவிர்க்கவும். குடும்பத்தில் சகிப்புத்தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். வெளி நபர்களின் தலையீட்டை குடும்ப விஷயங்களில் அனுமதிக்க வேண்டாம். நிதி நிலையில் நெருக்கடிகள் வந்து நீங்கும். ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதிர்ஷ்ட எண்: 8 , அதிர்ஷ்ட நிறம்: கருநீலம்.

கும்பம்

கும்ப ராசியினருக்கு கலவையான பலன்களைத் தரும் மாதமாகும். சனியின் சஞ்சாரத்தால் அலைச்சல்கள் இருந்தாலும், புதன் மற்றும் சுக்கிரனின் ஆதரவால் காரிய வெற்றி உண்டாகும். உத்தியோகத்தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். வேலைப்பளு இருந்தாலும் சக ஊழியர்களின் உதவியால் பணிகளை முடிப்பீர்கள். குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும். வாழ்க்கைத் துணையுடன் இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டுவார்கள். போட்டித் தேர்வுகளில் நல்ல முடிவுகள் கிடைக்கும். அதிர்ஷ்ட எண்: 8, அதிர்ஷ்ட நிறம்: நீலம்.

மீனம்

மீன ராசியினருக்கு ஓகஸ்ட் மாதம் வெற்றிகளையும் நன்மைகளையும் அள்ளித் தரும் மாதமாக அமையும். குருவின் அருளால் தடைகள் விலகி அனைத்துக் காரியங்களிலும் வெற்றி உண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்கு எதிர்பார்த்த பலன்கள் கிடைக்கும். சம்பள உயர்வு, புதிய பொறுப்புகள் தேடி வரும். வேலை தேடுபவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும்.

குடும்பத்தில் சுபகாரியங்கள் கோலாகலமாக நடக்கும். நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். பிள்ளைகளின் வெற்றியால் குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும்.

ஆரோக்கியம் சீராக இருக்கும். அதிர்ஷ்ட எண்: 3 , அதிர்ஷ்ட நிறம்: பொன்னிற மஞ்சள்.

LACKMAA
Blinds & Curtains

YOUR DREAM HOME
IS WAITING

0432-722-722
0403-793-893
1800-522-562

18 Denali Drive,
Clyde North,Victoria 3978.

sales@lackmaablinds.com.au
www.lackmaablinds.com.au

PARBOILED RICE
புழுங்கல் அரிசி
ROSA KEKULU RICE
Muthu Sampa Rice
1kg
ATHAVAN
PRODUCTS
Ginger Powder
Roasted
Jaffna
CURRY POWDER
PREMIUM
MOONG DAL
(Roasted)
Soya Meat
CHILLI POWDER
EVERYTHING
YOU NEED
ALL IN ONE PLACE!
FAST
DELIVERY
THIS WAY UP
ஆதவன்
ATHAVAN
Cargo Service
Australia to Sri Lanka
Sri Lanka to Australia
BEST SERVICES:
Cargo & Shipping Services
Groceries & Household Items
Spices Export & Import
Pooja Products
Boutique Dress & Saree Collection
Contact Us For Details
Sri Ayyappa Pvt LTD
+61 449 722 392
40 David street, Dandenong VIC 3175, Australia
ஸ்ரீ
AYYAPPA
ATHAVAN